496

496
2-55

ஸ்ரீ நரஸிம்ஹ ப்ரியா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1955
MADRAS

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் — 86
2. விளக்கை விளக்கிக்காட்டும் வேதாந்தவாசிரியன் — 90
   [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
3. அட்டைப்பட விளக்கம் — 92
4. ஸ்த்ரீ தர்மம் — 93
   [ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்வாமி.]
5. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் — 99
   [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யர் ஸ்வாமி, M.A.,B.L., அட்வோகேட், திருச்சி.]
6. திருப்பாவைக்கதை — 101
   [ஸ்ரீ.உப. திருவரங்கம், திருமலைதாதாசார்யர் ஸ்வாமி, M.O.L., திருப்பதி.]
7. பகவத்த்யானஸோபானம் — 105
   [ஸ்ரீ.உப. மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]
8. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் — 109
9. செய்திகள் — 113
10. ஒரொன்றுதானே — 115
   [ஸ்ரீ. உப. திண்டுக்கல், ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]

—:***:—

ஸஞ்சாரக்ரமத்தின் தொடர்ச்சி.

ப்ராந்தியங்கரையில் ஸ்ரீ பி. எஸ். ரங்கஸ்வாமி ஐயங்காரும் அவர் தம்பியும் 7,8–4–55 ஆகிய இரண்டு நாளும் விசேஷமாக ஆராதித்த பிறகு, 9-4–55 அன்று கரியாப்பட்டிணத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு அவ்வூர்வாஸிகள் மிகவும் ச்ரத்தையுடன் 3 தினங்கள் ஆராதித்தனர். அங்கிருந்து செம்போடைக்கு எழுந்தருளுவதாக இருந்து, மார்க்க அஸௌகர்யங்களால் அங்கெழுந்தருளாமல் முள்ளூர்ஸத்திரத்திற் கெழுந்தருள, செம்போடைவாஸிகள் அங்குவந்து ஆராதித்தனர். அங்கிருந்து 13–4–55 கீழையூருக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஸ்ரீராகவாசார்யரால் நன்றாகஆராதிக்கப்பட்டு, நாகப்பட்டிணத்திலுள்ள ப்ரமுகர்களின் ப்ரார்த்தனையின்பேரில் 14–4–55 நாகப்பட்டிணத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ வக்கீல் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } மன்மத ௵ சித்திரை ௴ { ஸஞ்சிகை 4

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

வைதிகாசாரமும் தத்கால அரசாங்கமும்

நமது பாரத தேசம் பண்டை நாளில் நாகரீகத்திலும், ஸமூஹக் கட்டுப்பாடுகளிலும் அரசியல் அமைப்பிலும் இதர சட்டங்களிலும் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்திருந்தது என்பது உலகத்தோர் ஒப்புக்கொண்ட உண்மை. உலகில் ஒருவன் தன் ஸமூஹத்தில் உள்ள மற்ற எல்லோரிடமும் காண்பிக்கவேண்டிய அன்பு, ஆதரவு முதலியவைகளும் உன்னதமான நிலையில் இருந்தன. இவைகளுக்குப் பல சான்றுகள் ராமாயணம், பாரதம் இவைகளில் காணப்படுகின்றன.

பல்லாண்டு பல்லாண்டுகளாக எல்லோராலும் ஏகமுகமாகவே கௌரவிக்கப்பட்ட ராமாயணம், பாரதம் முதலியவைகளை இதுவரை தூஷித்தவர்கள் கிடையாது. ஆனால் தக்காலம் நமது ஸமூஹத்திலுள்ள ஒரு சாரார் இவைகளை அருவருக்கத்தக்க முறையில் தூஷிக்கிறார்கள். இக்கொடூரச் செயலை கண்டிக்க வேண்டியவர்கள் கூட கண்டிப்பதில்லை.

பரந்த பாரத தேசத்தில் பலவித பாஷைகளும், பலவித ஜாதியினரும், நடை உடை பாவனைகளிலும் ஆசாரங்களிலும் பலவித வேறுபாடுகளும் இன்று வரை அறியாமல் இருந்து வருவதற்கு ஓர் பொதுவான அரசியல் அமைப்பும், அவரவர்களுடைய முன்னோர்களின் ஸமூஹப் பழக்க வழக்கங்களில் நல்ல நம்பிக்கையும்தான் முக்கிய காரணங்கள். நம்பிக்கை என்பது அரசியல் அமைப்பிலும், ஆந்மீக வளர்ச்சியிலும், முக்யமாக மதாசாரங்களிலும் அவசியம் இருக்கவேண்டியது உலகில் எல்லா பாகங்களிலும் காணப்படுகிறது இம்மாதிரியான நம்பிக்கை. ஆகையினால்தான் அரசியல் தலைவர்களிடமோ, அரசியல் அமைப்பிலோ நம்பிக்கை குறைவு ஜனங்களுக்கு ஏற்பட்டால் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும், அரசியல் குழப்பங்களும் ஏற்படுகின்றன.

இப்பொழுது நமது அரசாங்கம் பொருளாதார விஷயத்தில் மாத்திரம் அதிக கவனம் செலுத்தி வர்ணாச்ரம தர்ம விஷயங்கள் ஹிந்து சொத்து உரிமை, தெய்வ வழிபாடு, ப்ராசீன மதாசார பழக்க வழக்கங்கள் முதலியவைகளில் தலையிடாமல், ஜனங்கள் அவரவர்கள் முன்னோர் போன வழியே செல்வதற்கு தடை விதிக்காமல் அரசு புரிவரேயாகில் எக்காலமும் நமது நாடு செழிப்புற்று நாட்டுமக்களெல்லோரும் இன்புறுவார்களென்பதில் ஐயமில்லை.

ஒருவன் தன் மதத்தைக் காப்பாற்றிக் கொள்வதும், தன் மதாசாரப்படி பழக்க வழக்கங்களை அனுஸரிப்பதும், அவன் முன்னோர்களின் முறைப்படி தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுவதும் அவனுக்கென்று ஏற்பட்ட வைதிக தர்ம ஶாஸ்த்ரங்களை ஒட்டி நடப்பதும் முறையான காரியங்களாகும். அவைகளை மீறுவதென்பது நம் முன்னோர்களின் பகுத்தறிவினால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைகளை மீறுவதேயாகும். சுருங்கக்கூறின் ஒருவன் தன் தாய், தகப்பன் மனைவி மக்கள் கொண்ட தன் குடும்பத்தைக் காப்பதற்கு ஒப்பாகும். இவ்விஷயங்களில் அரசியல் நிர்வாகங்கள் தங்களுக்குள்ள செல்வாக்கின் காரணத்தினாலும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், ஆதலால் தாங்கள் எதுவும் செய்யலாம் என்ற தைரியத்தினால் தலையிடுவது நாட்டின் அமைதிக்கும், நேர்மைக்கும், சுபிட்சத்திற்கும் மறைமுகமாக கேடு விளைவிப்பதாகவே முடியும். முற்காலத்தில் ராவணன் தன் பலச்

செருக்கால் ஸீதையைச் சிறை வைத்ததும் தனக்கு அனுசரணையாக போர் புரிய ராக்ஷஸர்களைத் தூண்டினதும் இவைகளின் முடிவாய் நாடு முழுமையும் அழிந்ததும் இவை போன்றவைகளுக்கு உதாரணங்களாகலாம். அக்காலத்திலும் அவனுக்கு இதம் சொன்னவர்களும் உண்டு. அவர்கள் கூட, "இதுவரையில் நற்பயனின் காரணமாக நீ அதிக செல்வாக்கை அடைந்திருந்தாய். பிறர் மனைவியைத் தூக்கி வந்த காரணத்தால் அதர்மத்தில் புகுந்தாய். இனி அதர்மத்தின் பலனை யனுபவிப்பாய்," என்றெல்லாம் கூறினார்கள்.

ஆகவே ஓர் சுபிட்சமான அரசாங்கமென்பது ஜனங்களுடைய சுபிட்சத்தையும், ஆரோக்கியத்தையும், பொருளாதார மேன்மையையும், அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட வேண்டுமென்பதோடு கூட நாட்டிலுள்ள ஒவ்வொருவனும் தன் தாய் தகப்பன் மனைவி மக்கள் என்பது போல் போற்றி வருகிற வைதிக தர்ம ஶாஸ்த்ர ஒழுக்கங்களில் பிரவேசிப்பது அந்த ராஜ்யத்தின் அமைதிக்கும் செழிப்புக்கும் ஹேதுவாகமாட்டாது.

சில வருஷங்களுக்கு முன்பு விவாக விஷயத்திலேற்பட்ட வயது நிர்ணயச்சட்டம் மதாசார ஒழுக்கங்களில் நம்பிக்கையைக் குறைத்திருக்கிறது. ஶாஸ்த்ரங்களுக்கும் மதாசார ஒழுக்கத்திற்கும் மீறி நடப்பவர்களை தண்டிக்க வேண்டுமென்ற அம்சத்தை மட்டில் நிறைவேற்றாமலிருந்தால் அச்சட்டத்தை நாம் இவ்வளவு குறை கூறவேண்டாம். உதாரணமாக எட்டு வயது அல்லது கன்னிப்பருவம் கழிவதற்குள் கன்னிகைகளைக் கலியாணம் செய்து கொடுக்கவேண்டும் அப்படிச் செய்யாதவன் ப்ரூண ஹத்தி என்ற தோஷத்தை அடைவன் என்று தர்ம ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இம்மாதிரியான தர்ம ஶாஸ்த்ர விஷயங்களில் சட்டம் செய்யும் பொழுது நிர்பந்திக்காமல் முற்போக்காளர்கள் அவைகளைப் பின் பற்றினால் அவர்களுக்கு அனுஸரணையாகவும் தர்ம ஶாஸ்த்ரங்களில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு விரோதமில்லாமலும் இருக்கும். அப்படியின்றி ஶாஸ்த்ர நம்பிக்கையுள்ளவர்களையும் நிர்பந்திப்பதில் எவ்விதமான நியாயம் இருக்க முடியும் இதே மாதிரி ஒரு குறிப்பிட்ட வகுப்பிற்கு அரசாங்கம் சலுகை கொடுக்கவேண்டுமென்றால் அவர்களின் வாழ்க்கைத் திறத்தை உயர்த்தலாம், அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகள் கொடுக்கலாம். அதைவிட்டு கலப்பு விவாகம் வேண்டுமென்றும் அப்படிச் செய்தவர்களையே அரசாங்கப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுப்பதென்பதும் ஸரியான காரியமில்லை. இம்மாதிரியான முக்கியப் ப்ரச்னைகளில் பல்லாண்டுகளாக நாட்டின் அமைதிக்கு மிகவும் உபகாரமாயிருந்த ஓர் ஜாதிப் பிரிவினையை ஒழித்துவிட வேண்டும் என்று உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் கூறுவது முறையல்ல. நாட்டிலுள்ள ஜனங்களின் நன்மைக்காகவே பாடுபட்ட மஹாஸபை என்றுபெயர் பெற்ற காங்கிரஸ் ஸ்தாபனமும் நாட்டின் மக்களின் ஒருசாரர் உண்மையாகவே கருதிவரும், வைதிக தர்மங்களைப் பின்பற்றும் ஜாதிப் பிரிவினையை, ஒழித்துவிடுவதே தன் முக்கிய நோக்கம் என்று கூறுவதும் நாட்டின் வருங்கால நலன்களுக்குகந்தகாரியமல்ல. இம்மாதிரி முன்னோக்குள்ளவர்கள் நாளடைவில் கலப்பு மணம் செய்து கொள்ளாதவர்களுக்குத் தண்டனையென்றும், சொத்துரிமையில்லையென்றும் சொத்துப் பறிமுதல் உண்டு என்றும் பல நூதனவழிகளில் சட்டம் இயற்ற மசோதாங்களைக் கொண்டுவருவார்களேயானால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நம் மக்களின் ஒருசாரார் தெய்வ வழிபாடுகளை ஆலயத்திற்குள்ளேயே செய்யவேண்டுமென்ற பிடிவாத நோக்கத்துடன் ஆங்கில ஆட்சியில் அமுலாக்கப்பட்ட ஆலயப் பிரவேச சட்டத்தினால் ஆலயந்தொழுவதிலுள்ள நம்பிக்கையும் குறைந்து ஆலயங்கள் புனிதமானவைகள் என்று பாவித்தவர்கள் நாளடைவில் அடியோடு மாறிவிட்டார்கள். இவைகளின் விளைவாகவே தெய்வமே இல்லை என்ற நாஸ்திக வாதமும் ஆலயங்களையும் பிம்பங்களையும் புராணங்களையும் தகர்த்தெரிய வேண்டுமென்ற நோக்குள்ள கட்சிகளும் தோன்றி இருக்கின்றன. அவைகளின் நோக்கு இத்துடன் நிற்காமல் மேற்கூறிய வைதிகாசாரங்களில் நம்பிக்கையுள்ளவர்களை தூஷிப்பதிலும், நாட்டைவிட்டு விரட்ட வேண்டுமென்று கோஷமிடுவதிலும் பற்பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

ஆகவே நமது அரசாங்கத்திற்கும் அரசியல் சட்டசபைகளில் ஜனங்களின் பிரதிநிதிகளென்று வீற்றிருக்கும் நமது ஸமூஹத்தா

ருக்கும் கீழ்க்கண்டவாறு உறுத்திச்சொல்ல வேண்டியிருக்கிறது:—நமது ஸமூஹத்தில் ஒவ்வொருவரும் தனக்கும் தன் ஸமூஹத்திற்கும் தன் நாட்டிற்கும் மிகவும் அவசியமென்று உண்மையான மனோநிலையுடன் ஏற்றுக்கொண்டிருக்கும் தர்ம ஶாஸ்த்ரங்களின் முறைப்படியும் தெய்வ வழிபாடு, மதாசார பழக்கவழக்கங்கள், முதலியவைகளை கட்டாயமாக ஒவ்வொருவரும் அனுஸரிக்கவேண்டுமென்றோ அப்படிச் செய்தால் சலுகைகள் காட்டப்படுமென்றோ சட்டசபையினர்கள் சட்டங்கள் விதிக்க முடியாமற்போனாலும் அவர்களுக்கு இடையூறையாவது விளைவிக்காமல் இருக்க வேண்டும். பொதுவாக ஜனங்களுடைய சுபிட்சத்தில் மட்டும் நோக்குடையவர்களாயிருக்க வேண்டும். அது பொருளாதார அமைப்பினால் ஏற்படக்கூடியது. புராதனமான தர்ம ஶாஸ்த்ரங்களுக்கோ பழக்க வழக்கங்களுக்கோ விரோதமாக சட்டங்கள் இயற்றினால் ஸமூஹ நலன் ஏற்பட்டு விடாது. ஆனால் ஸமூஹநலனையும், ராஜ்ய நலனையும் மிகவும் பாதிக்கவும் கூடும். ஏற்கனவே இம்மாதிரி ஏற்பட்டுள்ள சட்டதிட்டங்களையும் அகற்றிவிட்டால் நம் ஸமூஹத்திற்கு நன்மையுண்டாகும். ஒரு சரீரத்தில் கை கால், ஹ்ருதயம், கண் முதலிய பல உறுப்புக்கள் போலவும் அறிவுபோன்ற பல உணர்ச்சிகள் போலவும் ஒரு நாட்டில் பல ஸமூஹத்தினரும் பல நோக்குள்ளவர்களும் எக்காலத்திலுமிருப்பதை யாரும் தடுக்க முடியாது. ஒவ்வொரு உறுப்பிற்கும் நன்மை செய்வது போல் ஸமூஹத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நன்மை பயக்கும் விதத்தில் அரசாங்கம் நடத்தப்படுதல் வேண்டும். இளைத்த கால்களை வெறுத்து அழகிய கொம்புகளைப் புகழ்ந்த கலைமானின் கதி நமக்கு ஞாபகத்தில் வருகிறது. ஆகவே உண்மையான ஸமூஹ ஒற்றுமையை முன்காலம்போல் உணர்த்தி அவரவர் தங்கள் தங்கள் காரியங்களில் மனச்சாட்சிக்கு விரோதமாக ஈடுபடாமல் இருப்பதற்கு உபகரிப்பதே உண்மையான அரசியலின்நோக்கமாக இருக்கவேண்டுமென்பதை எல்லோரும் உணரவேண்டும்.

ஃ ஃ ஃ ஃ

இயற்கையை நமது அறிவினால் வென்றுவிட முடியும் என்ற எண்ணம் ஸமீபகாலங்களில் அதிகரித்து வருவதை நாம் காண்கிறோம்.

இயற்கையும் செயற்கையும்

உலக ஸ்ருஷ்டியில் காணப்படும் இயற்கை தர்மங்களை நன்கு பயன்படுத்திக்கொள்ள நமக்கெல்லோர்க்கும் அறிவையும் அனுக்ரஹித்தருளினார் ஸ்ருஷ்டிகர்த்தா. அப்படிக்கின்றி உலகஸ்வபாவத்தை நாம் மாற்றிவிடலாம் என்றோ நாம் வென்றுவிடலாம்என்றோ எண்ணுவது அறிவின்மையே. நமக்குக்கிடைத்துள்ள அறிவும் இயற்கை குணமே. ஆதலால் இந்த இயற்கை குணத்தினால் மற்றைய இயற்கைத் தோற்றங்களை பயன்படுத்திக்கொள்ளலாம் எனக்கூறலாம். மனிதன் தன் செறுக்கினால் மனிதனையே, இயற்கை, நியதிக்கு உள்படாமல், உண்டாக்கிவிடலாம் என்று எண்ணுவதும் நம்கண்கூடு. செயற்கை மனித உருவத்தில் இயற்கையின் அழகுதான் இருக்குமா. உயிரைத்தான் புகுத்தமுடியுமா. கலர் கடிதத்தினால் செய்யப்பட்ட புஷ்பத்துக்கும் இயற்கை யன்னையின் ஸ்ருஷ்டியான புஷ்பத்துக்கும் வித்யாசம் உண்டல்லவா? நடிப்புக்கும், உண்மை ஸம்பவத்துக்கும் வித்தியாசம் உண்டல்லவா? எவ்வளவு வேற்றுமை ஒன்றுக்கொன்று ஏற்பட்டுள்ளது என்பது தெளிவு. செயற்கை மழையைப்பற்றி எவ்வளவு வர்ணித்தாலும் இயற்கை மழையின் குணமும், பலனும் இதில் உண்டா. இந்த அற்ப செயற்கை மழைக்காக நாம் செலவு செய்யும் காலம், அறிவு, மற்றைய பொருள்கள் இவைகளை யோசித்துப்பார்க்க வேணும். மற்றும் நவீன ஆராய்சியாளர்கள் இயற்கை வழியையே ஒழித்து செயற்கை மூலமாகவே உலக பிராணிகளையும், ஏன்! மனிதஸமூஹத்தையே உற்பத்திசெய்யமுயல்வதை நாம் என்னென்றும் உரைப்பது. ஒரு புறம் செயற்கை முறையில் உற்பத்தியில் விஞ்ஞானிகள் ஈடுபடுவதையும், அதே ஸமயத்தில் மற்றோர் புறம் செயற்கைமுறை மூலம் உற்பத்தியைத்தடுக்கவும முயற்சிகள் செய்யப்படுவதையும் நாம் கேட்டு கஷ்டப்படாமல் என்ன செய்யக்கூடும். செயற்கைமுறை மூலமாக நாம் எதையும் ஸாதிக்கலாமென எண்ணுவது நமது மடமை. பசித்தவனுக்கு அன்னத்தைக் கொடுக்காமல் ஆஹாரம் போல் தோற்றமளிக்கும் செயற்கை ஸாதனங்களைக்

காண்பிப்பதுபோல் தோன்றுகிறது. இவைகளை உண்டு பசியையாற்ற முடியுமா? உண்ணத்தான் முடியுமா?

உலகம் க்ரமமாய் வ்ருத்தியடையுமென்றும், அம்மாதிரியான உலகபாரத்தைக்குறைக்கவே ஸ்ரிய:பதி அவதரிக்கிறாரென்பதும் நமக்கு உபதேசிக்கப்பட்டவை. இதிஹாஸபுராணங்களும் அவ்விதமே கூறுகின்றன. முற்காலத்தில் இயற்கையில் ஏற்படும் இம்மாதிரியான குடும்பப்பெருக்கை இயற்கையுடன் ஒற்றுமையாகவே பெரியோர்கள் தடை செய்து அதன் மூலம் நற்பலனை அடைந்துமிருக்கிறார்கள். பெரியோர்களிடம் கௌரவம், உசிதமான திதி வார நக்ஷத்ரங்கள், மற்றைய காரணங்களால் தடுக்கப்படாத நாட்கள் என்றெல்லாம் ஒப்புக்கொண்டு குடும்பக் கட்டுபாட்டை நிலைநிறுத்தினார்கள். இம்முறையில் ஒழுங்கு, அமைதி, ஸுகம் முதலிய நன்மைகளைக் கண்டனர். ஆனால் இக்காலத்தவர் கட்டுப்பாட்டை மீறி நடக்கவேண்டுமென்பதில் உத்ஸாஹத்தையும் ஏற்படுத்தி, அதனாலேற்படும் தீய சக்திகளைக்கண்டு பின்னர் அஞ்சி, அதன்பின் செயற்கைக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு வெற்றிபெற ஆசைப்படுகிறார்கள். வியாதி வந்தபின் சிகித்ஸை செய்வதை விட வியாதி வாராமல் தடுப்பதுதான் சிறந்த முறை என்றெல்லாம் ஒப்புக்கொள்ளும் இக்காலத்தவர் இம்மாதிரியான வியாதியை ஏன் தடை செய்யக்கூடாது. இக்காலத்திய ஸமூஹக் கோட்பாடுகளும், நவநாகரீகங்களும் பலவித கெட்ட பழக்கங்களுக்கு ஆதாரமாகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. இம்மாதிரியாக இயற்கைக்கு அநுகுணமாக நற்பழக்கங்களை உண்டாக்குவதற்கு பதிலாக அரசாங்கமும் கூட பற்பல செயற்கை முறைகளை கையாளுவதற்கு ஏராளமான த்ரவ்யத்தைச் செலவு செய்யத்திட்டமிட்டிருப்பதும் மிகவும் வருந்தத்தக்க ஸம்பவம். ஜனப்பெருக்கு ஸம்பந்தமாய் ஆராய்ச்சி செய்த மேனாட்டவர்களாகிய மால்தூஸ் முதலியவர்கள்கூட இயற்கையான கட்டுப்பாடுகளை ஆதரித்தார்கள் என்பது பொருளாதார ஶாஸ்த்ரம் கற்றோர்க்கு நன்கு தெரியும். அப்படியிருக்க இயற்கைக் கட்டுப்பாடுகளை ஏன் ஆதரிக்கக் கூடாது. அவைகளை ஏன் ப்ரசாரம் செய்யக்கூடாது. அவைகளை ஆதரித்துவருகிறவர்களிடம் ஏன் பஹுமானம் காட்டக்கூடாது. அரசாங்கம் நற்பயனைக்கொடுக்கும் நல்வழிகளில் முயற்சிகளைச் செய்வது விரும்பத்தக்கது. வீண்வழிகளில் ப்ரவ்ருத்திசெய்வது ஏராளமான வீண் செலவு என்பது மட்டுமில்லை. அதற்காக அரசாங்கஸபைகளின் காலங்களையும் செலவு செய்வது என்பதுப் மறைமுக பெரும் நஷ்டத்தை யும் நமக்குக் கொடுக்கும் என்பதையும் நம் ஜனங்கள் நன்கு உணரவேண்டும்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் விளம்பரம் செய்வோருக்கு அடியிற் கண்டபடி கட்டண விகிதங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டை 4-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு		ரூ 25—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 250—0—0
அரை ஷ த்திற்கு		ரூ 125—0—0
உள்பக்கங்களில்:	ஒரு பக்கம் ஒரு தடவைக்கு	ரூ 20—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 200—0—0
அரை வருஷத்திற்கு		ரூ 100—0—0

அரை, கால் பக்கங்களுக்கும், மற்றும் சலுகை விளம்பரங்களுக்கும், மற்ற நியமங்களுக்கும் மானேஜர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, திருவள்ளூர் என்ற விலாஸத்திற்கு எழுதவும்.

ஸ்ரீ:

விளக்கை விளக்கிக் காட்டும் வேதாந்த வாசிரியன்

"பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக்கருள் தருமாயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக்கிருள் செக நான்மறையந்தி நடை விளங்க
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டுமிம்மெய்விளக்கே"

ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரரும் கவிதார்க்கிக ஸிம்மமுமான தூப்புல் அண்ணல் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸார மருளிச் செய்கையில், அவ் விஷயங்கள் தமது மனத்தின்கண் தான் தோன்றியாக வந்தனவல்ல என்று சில நல் வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமாயரு ளிய வெம்பரமன் அருளால் தமது மனத்தின் கண் எழுதிய பாசுரங்களும் அர்த்த விசேஷங் களும் ஆவன என்று ஸாதித்தார்.

ஸ்வாமியின் க்ரந்தங்களில் ஒரு மஹா ரத் னம்போல் அமைந்த ஷிக்ரந்தத்தில் ஆசார் யக்ருத்யாதிகாரத்தில் அமைந்துள்ளது மேற் கண்ட பாசுரம்.

மேலும் பரமபுருஷனுக்குப் பக்தர்களைக் கொண்டு நற்கவிகளையும் விசேஷார்த்தங்களை யும் பிரகாசிப்பித்தல் புதியதல்ல. அது அவனுக்கு என்றும் பிரியமாகிய ஸத்கர்ம விசேஷமாகிய லீலாவினோதமே என்பதை தெரிவித்து அதற்கோர் ஒப்பற்ற உதாரணம் காட்டுவது போலவும் அமைந்துள்ளது மேற் கண்ட பாசுரம்.

மிக மிகப் பழமையான காலத்தில் அவ தரித்தவர்களும் நித்யஸூரிகளில் மிக முக்கி யஸ்தர்களும் த்ரமிட வேதமாகிய பாசுரங் களுக்கும் கான வித்யைக்கும் தனியுரிமை பூண்டவர்களுமான பொய்கையாழ்வார், பூதத் தாழ்வார், பேயாழ்வார் ஆகியவிம் மூவரையும் முன்பொரு காலத்தில் ஆனிரைக்கருள் புரிந்த ஆயர் குலத் தலைவனும் தன்னுடைய செல்வ மாகிய உபயவிபூதிக்கும் அருள் புரிந்த திருவிக்கிரமனும், அன்றிக்கே 'அந்தணர்மாடு' என்று சொல்லப்படும் வேதம் தழைத்து வேதப் பொருள் விளங்கவருள் செய்பவனாகிய ஆச்சரிய சக்தியுடையவனுமாகிய பரமபுரு ஷன் திருக்கோவலூரிலே முன்பொரு காலத் தில் அம்மூவர் இருந்தவிடத்திற்கு அவர்கள் வேண்டாமலே தாமே வலியச் சென்று புகுந்து நெருக்கி மிக மிகப் பிரயாசைப் படுத் தியதால் இம்மெய்விளக்கு உதித்தது. அவன் அவர்களை வருத்தியதெவ்விதம்? என்னில், பண்டு ஒரு கால் தன் ஒரு திருவடியை வைக்க உலகமனைத்தையும் இடமாகக் கொண்ட ஒரு வன், ஒருவர் படுக்க, இருவர் இருக்க, மூவர் நிற்க மாத்திரம் இடமாக அமைந்த ஒரு இடை கழியில் முன்பே வந்தடைந்தவர் மூவரோடு தானும் தனது தேவிபூஷண ஆயுதங்களு டன் வந்து புகுந்து நெருக்கி நின்றால் அவன் அவர்களுக்கு வேறு வருத்தமும் தரவேண்டு வதுண்டோ? ஆனால்......அவர் அந்த வருத் தம் தமக்காகவோ செய்தான்? நாட்டுக்காகவும் நான்மறையந்திக்காகவும், வீட்டுக்காகவுமே யன்றோ? அதில் தவறு இல்லையே? ஆனாலும் இதை அயலாருக்காகவேதான் செய்தான் என்பதையும் பூர்ணமாகச் சொல்லிவிட முடி யாது. உலகத்திலுள்ளாரின் அஜ்ஞாநாந்த காரம் நீங்குவதும், வேதாந்தம் விளங்குவதும் அவை சொல்லும் வழியை அனைவரும் கடைப் பிடித்தொழுகுவதும், அனைவரும் நித்ய விபூ தியையடைந்து மோக்ஷாநந்தத்தை யனுபவித் தலும், அப்புருஷோத்தமனுக்கு மிக உகப்பே யல்லவா? இதைக் காட்டிலும் வேறு உகப்பு உண்டோ அவனுக்கு? ஆதலின் அவன் தன் பொருட்டாகவும் தனது ஆனந்தத்திற்காகவும் தான் அவர்களை நெருக்கி வருத்தினான்.

மேலும் இந்த நெருக்கத்தை அவர்களும் விரும்பி மகிழ்ந்து அனுபவித்ததினால் இது அவர்களுடைய ஆனந்தத்திற்காகவும் என்று கூறவும் தகும். வேண்டா இருக்கையிலேயே இப்படி வலுவிலே ஸர்வேச்வரன் தானே புகுந்து நெருக்கித் தன்னையும் திருமகளையும் தோற்றுவித்து மகிழ்ந்து அனுபவிக்கச் செய்தல் எவருக்காவது கிடைக்கக் கூடிய பேறு? அப்பேறு அடைந்தவர் அம்மூவருமேயல்லவா? முதன் முதலில் இவ்வுலகத்தில் பாட்டுக்காகவும், தமிழ்ப் பிரபந்தங்களுக்காகவும் தனியுரிமை பூண்டு அவதரித்தவர்களல்லவோ அவர்கள்? அதனால்தான் பரம புருஷனும் அவர்களிடம் அவ்வளவு வ்யாமோஹம்கொண்டு வலியச் சென்று அணைந்தான்போலும். அவர்களில் ஒருவர் 'வையத்தடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி படிவிளங்கச் செய்தவர்'. மற்றொருவர் 'பெருந்தமிழன் நல்லேன்' என்று தமது மெய்க்கீர்த்தியைத் தாமே நமக்கறிவிக்கும் பெரியோர். மற்றுமொருவர் 'தமிழ்த் தலைவன்' என்று திருவரங்கத்த முதனாலே மங்காசாஸனம் செய்யப்பட்டவர்.

அவன் அம் மூன்றாழ்வார்களையும் நெருக்கியமையால் நாட்டுக்குள்ள இருள் நசித்தது. இவ்விடத்தில் நாடென்பது மண்ணோட்டையும் விண்ணோடுமாகிய திருநாட்டையும் குறிக்கும். மண்ணாட்டின் இருள் நீங்காதிருந்தபோது அதற்குத் திருநாடுதோன்றாதுதானே இருந்திருக்கும்? ஒன்றினது அந்தகாரம் நீங்கிற்று. மற்றொன்று தோன்றிற்று. மண்ணின் இருள் நீங்கியது விண் விளங்கித் தெரிய காரணமாயிற்று. உபயவிபூதிக்கும் அருளச் செய்பவன் உபயவிபூதியின் விளக்கத்துக்காகவே இப்பாடுபட்டான் என்பதே முறையல்லவா?

மேலும் நாட்டின் இருள் நசித்தபடியால் நான்கு வேதங்களின் முடிகளாகிய அந்தங்களின் நடை உலகத்தில் விளங்கலாயிற்று. மக்களனைவரும் வேதாந்தங்களில் சொல்லியபடி நடந்து பக்திப்ரபத்தியாதிகளை யனுஷ்டித்து விளக்கம் பெற்றனர். அந்தணர் மாடு எனப்படும் வேதத்தின் பொருள் விளங்கவருள் செய்பவன் மாயன் மணிவண்ணனாதலால் அது நடந்தேறவே இங்கும் இவர்களை நெருக்கினான். அவனது அபீஷ்டமும் நிறைவேறிற்று. தனது ஸங்கல்ப்பம் இன்னதென்று அயலார் அறியாதபடி லீலாவிநோதமார்க்கத்திலேயே அதை நிறைவேற்றிக்கொள்ளும் அத்யாச்சர்ய சக்தியையுடையவனாகையால் மாயன் என்று மங்களாசாஸனம் செய்யப்படுகிறான். வேதாந்தமும் விளக்கம்பெற்றது. அதன் நடையும் விளக்கம் பெற்றது. அதன் வழியே செல்லுவோரும் விளக்கம் பெற்றனர். அவ் வழி செல்பவர்களுக்கு வேதாந்தம் காட்டும் பரமனது திருவடிகளும் விளக்கம்பெற்றன.

இப்படிப்பட்ட மஹிமை பொருந்திய திருவந்தாதிகளாகிய ஒப்பற்ற தீபம் ஓர் வீட்டின் இடைகழியில் வெளிகாட்ட அமைந்தது. ஆனால், அது கேவலம் ப்ரக்ருதி மண்டல திமண்டலத்திலுள்ள ஓர் சாதாரணமான வீட்டு இடைகழியில்தான் அமைந்ததோ? அன்று! அன்று! அப்படிக் கொள்ளத் தகாது. வீடு எனப்படும் மோக்ஷத்திற்கு அத்யாவசியமாய் அமைந்த விளக்கமல்லவோ அது? மோக்ஷத்திற்கமைந்தவர்களுக்கு அத்யந்தோபயோகத்திற்கே யமைந்ததல்லவோ அது? அன்றியும் முக்த தசையாகிய வீட்டுக்கு இடைகழியைப் போலிருக்கும் ஜீவன் முக்த தசையிலே பகவத் ஸ்வரூப ரூப குணவிபவஐச்வர்யாதி விசேஷங்களைத் தடையறவும் குறைபறவும் அனுபவித்து மகிழத் துணைசெய்யும் ஓர் விளக்காயமைந்ததல்லவோ அம்மூன்று திருவந்தாதிகளும்!! மேலும் முமுக்ஷுக்களுக்கும், முக்தர்களுக்கும், நித்யர்களுக்குமே இது மிகவும் ஆனந்தகரமான துணைசெய்யும் என்று காண்பிக்கவும், ஸத்யத்தையல்லாமல் வேறொன்றையும் கூறவல்லதல்லாத இவ்விளக்கேதான் துணை செய்யும் என்பதையறிவிக்கவும், இதைத்தவிர வேறு மெய்யான துணை அவர்களுக்கில்லை என்பதை நிதரிசனமாக்கவும் இப்பாட்டு முடிவில் இரண்டு 'ஏ' காரம் ப்ரயோகித்திருக்கி

ளுர் ஸ்வாமி தேசிகன். மேலும் அப்பாசுரங்களை அவர்களும் தான்தோன்றியாகக் கூற வில்லை. நித்யஸூரிகளாகிய அவர்கள் இப்புவியில் அவதரிக்குமுன்பே பரமபதத்தில் அநுஸந்தித்துக் கொண்டிருந்ததைத்தான் பகவத் க்ருபையாலும் ஆஜ்ஞையாலும் இங்கே ப்ரவர்த்திப்பித்தார்கள் என்பதைக் காட்டவே "உரிய பழையவர் மூவர்" என்று அருளிச் செய்தார் ஸ்வாமி தேசிகன்.

மேலும் 'இப்பாசுரம் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கையில் அம்மூன்று திருவந்தாதிகளையும் தம் திருக்கையில் வைத்துக்கொண்டே மனமுருகி அவைகள் விஷயமாகத் தாம் கூறுவது அனைத்தும் ஸத்யமென்று கூறிப் பாசுரத்தை முடிக்கிருர். "இம் மெய்விளக்கே" என்று' என்றும் பெரியோர் கூறுவர்.

தவிரவும் ஜ்ஞானஸ்வரூபனும் ஜ்யோதிஸ்வரூபனுமாகிய வெம்பெருமானுகிய மெய்விளக்கு திவ்யப்ரபந்தங்களை யத்யனம் செய்பவர்களுக்கு மோக்ஷமார்க்கத்தையும் முமுக்ஷுக்களுக்கு அவர்களுடைய ஹ்ருதய குகையில் தன்னையும் காட்டுவான் என்பதும் இதனுல் பெறப்படுவதாகவும் கூறுவர்.

குறிப்பு:—பாட்டு—பாசுரம் கானம்; உரிய-உரிமைபெற்ற, (முதன் முதலில் தமிழ்ப் பாசுரங்களுக்கும் அத்துடன் சேர்ந்த கானத்துக்கும் உரிமை பெற்றவர்); பழையவர்-மிக மிகப் பழையகாலத்தவர்கள், நித்யஸூரிகள்; மாட்டுக்கு-மாட்டுகளுக்கு, செல்வத்திற்கு, [உபய விபூதிக்கு] வேதத்திற்கு; மலிந்து-அதிகமாக, தாமே வலியவந்து; நாட்டுக்கு-உலகிற்கு, திருநாட்டுக்கு-(நாட்டுக்கிருள்-திருநாடு செல்லும் மார்க்கத்தை மறைக்கும் அஜ்ஞானம்); நான்மறையந்தி நடை விளங்க-வேதாந்த மார்க்கம் விளங்க, வேதாந்த மார்க்கம் யாவருக்கும் விளங்கித்தோன்ற வேதாந்தத்தில் போற்றப்படும் பகவானுடைய திருவடி பிரபாவம் விளங்கித் தோன்ற; வீட்டுக்கிடைகழி-வீட்டின் தேஹளி, மோக்ஷத்தின் இடைகழியைப் போன்ற முமுக்ஷுதசை; வெளிகாட்டும்-இடங்களை விளக்கிக்காட்டும்; வெளி—ஆகாசம் (தஹராகாசம் எனப்படும் பரம்பொருள்)இம்மெய்விளக்கு-இந்த ஸத்யத்தையேயுரைக்கும் ஜ்ஞானதீபஸ்வரூபமாகிய ப்ரபந்தம்; ஸத்யஸ்வரூபனும், ஜோதிஸ்வரூபனுமாகிய பகவான்; இவ்விளக்கே வெளிகாட்டும் மெய்யே. என்று கொண்டால் ஏகாரம் நிச்சயத்தைக் காட்டும் தேற்றப்பொருளில் வந்ததாகக் கொள்ளல் பொருந்தும்.

அட்டைப்படவிளக்கம்:—

ஸ்ரீசாலிஹோத்ரரென்னும் மஹர்ஷியின் தபஸ்ஸிற்கு இரங்கி வ்ருத்தரூபியாய் வந்து அவரளித்த மாவை உண்டு அவரது ஆச்ரமத்திலேயே நித்யவாஸம் செய்யத் திருவுள்ளம் பற்றி சயனிக்க எவ்வுள்? என்று கேட்டு சேஷதல்பத்தில் ப்ரஹ்மாவுக்கு ஜ்ஞாநோபதேசம் செய்துகொண்டும், ஸ்ரீசாலிஹோத்ரமஹர்ஷியின் ப்ரார்த்தனைக்கிணங்க "இந்த க்ஷேத்ரத்திற்கு வந்து என்னை தர்சிக்கும் ஸகலபக்தர்களுக்கும் எல்லாவிதமான இஷ்டப்ராப்தியையும் அநிஷ்டநிவ்ருத்தியையும் தருகிறேன்" என்று சிரஸில் வலதுகரத்தை வைத்து ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டும், வெகு விலக்ஷணமான திருமேனியுடன் முனிவர் தொழுதேத்த தன்னடியார்க்கினியனும் வானோர் நாயகனுயமைந்த இந்திரற்கும் தம்பெருமான் எவ்வுள் கிடந்த எழிலரசு அஞ்சலஞ்சலென்று அபயமளித்துக்கொண்டு வைத்யநாதனும் மன்மதமன்மதனுக அட்டையில் இலங்குகிருன். இவ்வெம்பெருமானை எத்தியிறைஞ்சுவார் இவ்வண்டமாள்வதுடன் அமருலகும் சென்று நித்யானந்தமெய்துவமென்று மங்கையர்கோன் ஆணையிட்டுப்பணித்தபடி. இவ்வெருமான் கண்டருளும் சைத்ரோத்ஸவம் நாளது சித்திரைமீ 14உ முதல் பத்து தினங்கள் நடைபெருகிறது. அக்காலத்து ஆனைபரிதேரின்பேலழகனுய் வரும் கோலங்களைக்கண்டு பணிவது கண்படைத்தவர் கடமையாகும்

P. K. ராமபத்ரன்.

ஸ்ரீ:

ஸ்த்ரீதர்மம்

(14-வது ஸம்புடம் 2-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்நாநனத்திற்கு கூடாதஜலம்

சண்டாளர்கள், பதிதர்கள், ம்லேச்சர்கள், நாஸ்திகள்முதலானவர்கள் வெட்டின குளம் கிணறுகளில் ஸ்நாநம்செய்யக் கூடாது. வேறு கதி இல்லாமல் அந்த குளம் கிணறுகளில் ஸ்நாநம் பண்ணும்படி நெர்ந்தால் குளத்திலிருந்து மூன்றுகை மண்ணை எடுத்து கறையில்போட்டுவிட்டாவது ஸ்நாநம்செய்யவேண்டும். விஷ்ணுபக்தைகளான ஸ்த்ரீகள் மற்றைதேவாலயத்தினருகிலுள்ள குளங்களில் ஸ்நாநம்பண்ணக் கூடாது.

புண்ட்ரவிதி

பிறகு இடது உள்ளங்கையில் திருமண்ணைக் கறைத்து 'கேசவாய நம: என்றுசொல்லி நெற்றியிலும் நராயணயநம: என்று நடு வயிற்றிலும் மாதவாயநமஃ என்று மார்பிலும், கோவிந்தாய நம: என்று கழுத்தின் நடுவிலும், விஷ்ணவே நமஃ என்று வயிற்றின் வலதுபுறத்திலும், மதுஸூதநாய நம:, என்று வலது புஜத்திலும், த்ரிவிக்ரமாயநம: என்று வலது கழுத்திலும், வாமநாய நம: என்று வயிற்றின் இடதுபுறத்திலும் ஸ்ரீதராய நம:என்று இடதுபுஜத்திலும், ஹ்ருஷீகேசாயநம: என்று இடது கழுத்திலும், பத்மநாபாய நம: என்று வயிற்றின் பின்புறத்திலும், தமோதராய நம: என்று பிடறியிலும் பகவானுடைய பாதம்போலவாவது அல்லது அர்தசந்திரன்போலவாவது ஊர்த்வ புண்ட்ரங்களை தரித்து கொண்டு பிறகு ஸ்ரீசூர்ணத்தை கறைத்து அந்த புண்ட்ரங்களின் நடுவில் முன் தரித்த வரிசையாகவே ஸ்ரியை நம: அம்ருதோத்பவாயை நம:, கமலாயை நம:, சந்த்ரஸோதர்யை நம:, விஷ்ணுபத்நியை நம:, வைஷ்ணவ்யை நம:,வாரோரோஹாயை நம:, ஹரிவல்லபாயை நம: சார்ங்கிண்யைநம:, தேவதேவ்யைநம:, ஸுரஸுந்தர்யை நம:, மஹாலக்ஷ்மியை நம: என்கிறமந்திரங்களைச் சொல்லி மூகில்இலைபோல் தரித்துக் கொள்ளவேண்டியது.

த்யாநச்லோகங்கள்

பிறகுசதுச்சக்ரம்நமஸ்யாமிகேசவம்கநகப்ரபம், நாராயணம் கநச்யாமம் சதுச்சக்ரம் நமாம்யஹம், மாதவம்மணி பங்காபம் சிந்தயமி சதுர்கதம். சந்திரபாஸம் சதுச்சார்ங்கம் கோவிந்தமபிஸம்ச்ரயே. விஷ்ணும்சதுர்ஹலம் வந்தே பத்ம கிஞ்சல்க ஸன்னிபம், சதுர்முஸலமப்ஜாபம் ஸம்ச்ரயே மது சூதனம். ஆச்ரயாமிசது: கட்கமக்னிவர்ணம் த்ரிவிக்ரமம், வாமனம் பாலசூர்யாபம் சதுர்வஜ்ரம் விபாவயே. ஸ்ரீதரம் புண்டரீகாபம் சது: பட்டஸமாச்ரயே, சதுர் முத்கரமப்யேமி ஹ்ருஷீகேசம் தடித்ப்ரபம், பஞ்சாயுதம் பத்மநாபம் ப்ரணமாம்யர்க்க ரோசிஷம், தாமோதரம் சதுஷ்பாசமிந்த்ர கோபநிபம் பஜே. என்கிற ச்லோகங்களைச் சொல்லி அந்தந்த இடங்களில் கேசவாதி மூர்த்திகளை அந்தந்த ரூபத்தோடு த்யானித்து ஸ்ரியை நமஃ யென்றுதுடங்கி அந்தந்த இடங்களில் மஹாலக்ஷ்மியைத் தியானித்து அஞ்சலியைப் பண்ணவேணும்.

பிறகு பகவானைத்துடங்கி தன்னுடைய ஆசார்யன் வரையில் தனியன்களை அநுஸந்தித்து *அஷ்டாக்ஷரமந்திரத்தின் த்யான ச்லோகத்தை அனுஸந்தித்து பகவானைத்தியானம் செய்துகொண்டு ப்ரணவமில்லாமல் தாந்திரிகமான திருவஷ்டாக்ஷர மந்திரத்தை யதாசக்தி ஜபிக்கவேண்டியது. ஷை ஜபம் செய்யும்பொழுது ருஷி, சந்தஸ், தேவதை அங்கந்யாஸம் முதலியவைகளை ஸ்த்ரீகள் செய்யக்கூடாது.

த்வயத்தையும் சரமச்லோகத்தையும் அந்தந்த த்யான ச்லோகத்தைச் சொல்லிக்கொண்டு ஜபிக்கவேண்டும்.

அர்க்யம்

பிறகு சூர்யாய நம: யென்று சொல்லி இரு கைகளினாலும் ஜலத்தை யெடுத்து சூரியமண்டலத்திலிருக்கும் பகவானைக் குறித்து அர்க்யம் கொடுக்கவேண்டும்.

---

* அஷ்டாக்ஷரமும் அதன் த்யாநஸ்லோகமும் ஆசாயாள் மூலம் உபதேசம்பெறவும்,

அக்னி பூஜை

பிறகு ஒளபாஸநாக்னியிலிருக்கும் சாம்பலை தள்ளிவிட்டு முட்டான் உமி முதலியவைகளினல் அக்னியை ஜ்வலிக்கும்படி செய்து புஷ்பம் அக்ஷதை இவைகளினல் அக்னியை அர்ச்சித்து 2, 4, 6, 8, இம்மாதிரி இரட்டைப் படையாகவே பஞ்சாங்க நமஸ்காரங்களைச் செய்யவேண்டும்.

இரண்டு கால் பெருவிரல்களினுலும், இரண்டு முழங்கால்களினுலும், தலையினுலும் பூமியைத் தொட்டு இரண்டுகைகையையும் கூப்புவது பஞ்சாங்க நமஸ்காரம்.

பர்த்தா ஒளபாஸனம் பண்ணவருங்காலத்தில் அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும்.

பகவத் வந்தனம்

பிறகு தனது கிருகத்திலிருக்கிற பகவானுடைய ஸன்னிதிக்குப்போய் அவ்விடத்தை பெருக்கி மெழுகி கோலமிட்டு ஆராதனத்திற்குவேண்டிய பாத்திரங்களை சுத்திசெய்து புஷ்பம் சந்தனம் முதலிய பூஜாத்திரவ்யங்களை சேகரித்து வைத்து நெய் அல்லது எள்ளு தேங்காய்யெண்ணையினல் தீபம் ஸமர்ப்பித்து இரட்டைப்படையாக ப்ரதக்ஷிணம் நமஸ்காரங்களைப் பண்ணி தனது குழந்தைகளையும் கால்கைகளை சுத்தி செய்து ஈர வஸ்திரத்தினல் தேஹத்தை அழுக்கில்லாமல் துடைத்து பகவானை நமஸ்கரிக்கச்செய்து உமதடிமைகளான அடியோங்களை கிருபையோடு கடாக்ஷித்தருளவேண்டுமென்று பிரார்திக்கவேண்டும்.

பிறகு மாமியார், மாமனர், பர்த்தா, தாய், தகப்பன், ஆசார்யன் முதலான பெரியோர்களையும் முன்போலவே நமஸ்கரிக்க வேண்டும்.

பாகாரம்பம்

காய்கறிகளை சுத்தமான ஜலத்தினல் அலம்பி, பூச்சி புழு இருக்கும் பாகத்தை தூரயெறிந்துவிட்டு சுத்தமான பாகங்களை அரிவாள்மணையினல் நறுக்கிவைத்துக்கொண்டு அரிசியையும் புழுக்களில்லாமல் புடைத்துவைக்கவேண்டும்.

ஜலசுத்தி

ஜலத்தை பரிசுத்தமான வஸ்திரத்தினல் மூன்றுதடவை வடிக்கட்டி கால் கை சுத்தம் செய்வதற்கும் பாகம் செய்வதற்கும் ஆராதனத்திற்கும் வெவ்வேறு பாத்திரங்களில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பாத்திரங்களின் சுத்தி.

தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை முதலான உலோகங்கள் எந்த எந்த வஸ்துக்களினல் அழுக்கில்லாமல் பிரகாசத்தை அடையுமோ அந்தந்த வஸ்துக்களினல் அந்தந்த பாத்திரங்களை சுத்தி செய்யவேண்டும். அதாவது வெள்ளிப்பாத்திரங்களை சுண்ணும்பினுலும், தாம்ரம் பித்தளைப்பாத்திரங்களைப் புளியினுலும், வெண்கலத்தைசாம்பலினுலும் இவைபோல்மற்றவைகளையும்மற்றசுத்தமாகக் கூடிய வஸ்துக்களினுலும் சுத்தி செய்யவும். சுத்தி செய்யும்பொழுது கேசவாய நம: யென்பது முதலான மந்திரங்களைச் சொல்லி சுத்திசெய்யவேண்டும். அசுத்தியின் தாரதம்யத்திற்குத் தகுந்தபடி புளி முதலியவைகளினல் தேய்க்க வேண்டிய தடவைகள் அதிகமாகவும் குறைச்சலாகவும் ஸம்பவிக்கும்.

தங்கம் வெள்ளி பாத்திரங்கள் ஜலத்தினல் அலம்புவதாலும் இரும்பு, ஈயம், மண் இவைகள் நெருப்பிற் காய்ச்சுவதாலும் சுத்தங்களாகும்.

கல்லுபாத்திரங்களை சாம்பலையும் மண்ணையும் ஜலத்தில் கறைத்து அலம்பி சுத்திசெய்ய வேண்டும். மண் பாத்திரங்களில் பாகம் செய்தால் ஒரு மாதத்திற்குப் பிறகு அந்தப்பாண்டங்களை உபயோகப்படுத்தக் கூடாது. முதல் நாள் பாகம்செய்த மண்பாத்திரத்தை சுத்தமாக தேய்த்து வெய்யலில்வைத்து நெருப்பில் காய்ச்சினபிறகு மறுதினம் பாகத்திற்கு உபயோகப் படுத்தவேண்டும்.

சண்டாளன் தொட்டதும், எச்சில்பட்டதுமான மண்பாண்டங்களை உபயோகப்படுத்தக் கூடாது. எரிந்துவிடவேண்டும்.

பகவானுடைய பூஜைப் பாத்திரங்களை மனிதன் காரியங்களுக்கு உபயோகப்படுத்தவும், மனிதன் உபயோகப்படுத்தின பாத்திரங்களை பகவானுடைய பூஜைக்கு உபயோகப் படுத்தவும் கூடாது.

நாய், காக்காய், மாடு. இவை முதலியவைகளால் மோந்து பார்க்கப்பட்ட பாத்திரங்களை

யும், நான்காவதுஜாதிமனிதர்களினுல்தொடப் பட்ட பாத்திரங்களையும், உப்புக் கலந்த ஜலத்தினுல் 10-தடவை அலம்பவேண்டும்.

தானியம், முறம், சல்லடை, கயறு கோறைப்பாய் முதலியவைகளை ஜலத்தினுல் ப்ரோக்ஷித்தால் சுத்தமாகும், பட்டுவஸ்திரம், கம்பளம், மெத்தை, தலைகாணி முதலியவைகளை வெய்யலில் காயவைத்து ஜலத்தினுல் ப்ரோக்ஷித்தால் சுத்தமாகும். இவைகளில் அசுத்தங்கள் கறைபட்டு அது போகாமலிருந்தால்உப்புமண்ணை ஜலத்தில் கறைத்துஅலம்ப வேண்டும்.

வஸ்திரம் தீட்டுப்பட்டால் நினைத்துவிட வேண்டும். நனைக்கமுடியாத வஸ்திரமூட்டைகள் தீட்டுப்பட்டால், தீட்டுப்பட்ட இடத்தை மட்டும் ஜலத்தினுல் நனைத்து மற்ற இடத்தை ஜலத்தினுல் ப்ரோக்ஷிக்கவேண்டும்.

மற்றும் சாஸ்திரங்களை அறிந்த பெரியோர்களுடைய ஆசாரங்களையும் அனுசரித்தும் முன்சொல்லியபடிவஸ்துக்கள் கெட்டுப்போகாதபடி சுத்திசெய்யவேண்டும்.

அக்னி

பர்த்தா ஔபாஸனம் செய்தவுடன் அந்த அக்னியை அடுப்பில் சேர்த்து அதினுலேயே பாகம் செய்யவேண்டும். ஔபாஸனம் செய்யாவிட்டால் பாகம்பண்ணுவதற்காக அக்னியை கும்மட்டி முதனான இடத்தில் அவசியம் ரக்ஷித்துவைக்கவேண்டியது. பிறருடைய வீட்டிலிருந்து அக்னியை வாங்கி வந்து பாகம் பண்ணினுல், அதனுல் செய்யப்படும் பகவானுடைய ஆராதனம், அதிதி பூஜை முதலான புண்ணியகாரியங்களின் பலம் நெருப்புக்கொடுத்தவர்களுக்குப் போய்விடும். ஆகையினுல், பிறர் வீட்டு அக்கினியை வாங்கக்கூடாது. வேறுவழியில்லாவிட்டால்ஜ்ஞானிகள் அல்லது தார்மிகர்கள் வீட்டிலிருந்து அக்னியை வாங்கி வந்து அதினுல் பாகம் பண்ணவேண்டும்.

கூடாத விறகுகள்

பலாசம், வில்வம், அரசு, கோவிதாறம், விபீதகம், மரீசி, பனைமரம், ஊமத்தை, பாரிஜாதம், கடுக்காய், ஆமணக்கு, கறஞ்சம், இளவம், வாகை, எருக்கு, எள்ளு, விஷமரம் முள்ளுள்ள மரம், புகையும்மரம், துர்க்கந்தமுள்ள மரம் இவைகளின் விறகுகளினுல் பாகம் செய்யக்கூடாது. மற்றை விறகுகளினுல் செய்யலாம்.

பாக ஸங்கல்பம்

கிழக்கு அல்லது வடக்கு முகமாகவே இருந்து பாகத்தைப் பண்ணவேண்டும். பாகத்தை ஆரம்பிக்கும்பொழுதே பகவானுடைய ஆராதனத்திற்காகவே சமயல் பண்ணுகிறேம் யென்கிற நிச்சயத்தோடு ஆரம்பிக்கவேண்டும்.

அங்க சுத்தி

பாகம்பண்ணும்பொழுது கண்ஜலம், மூக்குஜலம், வேர்வை முதலிய அசுத்தங்களைத் தொட்டாலும், இடுப்பின் கீழ் அங்கங்களைத் தொட்டாலும் உடனே கையை அலம்ப வேண்டும்.

பாகம்

பக்குவமாகாதது ருத்திரனுக்கு இஷ்டமாகும். அக்னியில் சுட்டது அசுரர்களுக்கு இஷ்டமாகும். நன்ருக பக்குவமானதே தேவர்களுக்கு இஷ்டமாகும். ஆகையினுல், வஸ்துக்களை நன்ருக பக்குவம் பண்ண வேண்டும்.

கூடாத வஸ்த்துக்கள்

ஆகாரநியமம் முதலிய கிரந்தங்களில் நிஷேதிக்கப்பட்டவைகளும், இது சாஸ்திர நிஷித்தமா அல்லவா யென்று ஸந்தேகிக்கப்பட்டவைகளும் பாகம் செய்யக் கூடாதவை.

தினம் செய்யக்கூடாதவை

வடை, அதிரஸம் முதலிய பக்ஷணங்களையும், பாயஸம் பொங்கல் முதலிய உயர்ந்த ஆகாரங்களையும். கல்யாணகாலம், அதிதிகள், பந்துக்கள் வந்தகாலம், சிரார்த்த காலம் முதலிய காலங்களைத் தவிர, மற்றை தினங்களில் செய்யக்கூடாது. தளிகை செய்த காலத்தில் வேர்வையினுல் நனைந்த வஸ்திரத்தைவிட்டு வேறு வஸ்திரத்தை தரித்து கால் கைகளை அலம்பி ஆசமனம் செய்துகொண்டு ஆராதன காலத்தில் வேண்டிய உபசாரங்களைச் செய்ய வேண்டும்.

பகவதாராதனம்

சுமங்கலியான ஸ்திரீகள் தனித்து பகவதாராதனம் செய்யக்கூடாது. தனது பர்த்தா

ஆராதனம் செய்யும்போது ஆராதனத்துக்கு வேண்டிய சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், தளிகை, தாம்பூலம் முதலான வஸ்துக்களை அந்தந்த சமயங்களில் பக்தியோடு கொடுப்பதும், பகவத்ஸன்னிதியை சுத்தி செய்து அலங்கரிப்பதும், மற்றும் பக்தியோடு பகவானை ஸ்துதிப்பதும், கானம் செய்வது முதலியதே அவர்களுக்கு ஆராதனமாகும். ஸ்த்ரீகள் ஸாளக்கிராமங்களை தொடக்கூடாது. பகவத் ஸன்னிதியில் உடுத்திக் கழித்த பழைய வஸ்திரங்களினால் தீபத்திற்கு திரிபோடுவதும், ஆமணக்கு பின்னை எண்ணெயினால் விளக்கேற்றுவதும், அசுத்தங்களான தீபம், தூபம் முதலியவைகளை ஸமர்ப்பிப்பதும் கூடாது.

அன்னவ்யஞ்சனங்களை அடுப்பில் வைத்து கரியேறின பாத்திரங்களில் பகவானுக்கு ஸமர்ப்பிக்கக்கூடாது. வேறு சுத்தமான பாத்திரத்தில் ஸமர்ப்பிக்கவேண்டும்.

வைச்வ தேவம்

தினந்தோறும் அடுப்பில் வைக்கப்படும் விறகுகளுக்குள்ளிருக்கும் எறும்பு புழுக்களை எரித்துவிடுவதாலும், ஜலங்களில் நமது கண்ணுக்குத் தெரியாத புழுக்களை வேகவைத்து சாப்பிடுவதாலும், உயிருள்ள கீரை முதலிய கறிகளைப் பிடுங்கி துண்டந் துண்டமாக வெட்டுவதினாலும், குப்பைகளைப் பெருக்கும் பொழுது வளக்க மாறினால் பல பூச்சிகளை கொல்லுவதினாலும், உரலில் அரிசி முதலானவைகளைக் குத்துங்காலத்தில் பல ஜந்துகளையும் கொல்லுவதினாலும் ஐந்து விதமான பிராணிகளுடைய ஹிம்சைகளை அவசியம் செய்தே தீரவேண்டியதாக ஸம்பவிக்கிறது. அதற்குப் பிராயச்சித்தமாக வைச்வ தேவம் பஞ்சமகாயஜ்ஞங்களை அவசியம் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் ஷை பாபம் போகாது. ஆகையினால் ஷை பஞ்சமகாயஜ்ஞங்களை பர்த்தா செய்யும்பொழுது பலிஹரணம் முதலியவைகளைச் செய்து, பிறகு ஹோமம் செய்த அக்னியை குண்டத்தில் ரக்ஷித்து வைக்க வேண்டும்.

பிக்ஷை

ஸன்யாஸிகள் பிக்ஷைகேட்டால், கால் அலம்ப ஜலம்கொடுத்து, கையிலும் ஜலத்தை விட்டு, அன்னம் வ்யஞ்சனங்களை பாத்திரத்தினால் சிக்யத்தில் போகட்டு பிறகும் அவர் கையில் ஜலம்கொடுக்கவேண்டும்.

பிரஹ்மசாரிகள் பிக்ஷை கேட்டாலும், அப்படியே பிக்ஷை போகட்டு, பின்பு கையில் ஜலம் கொட்டாமலிருக்கவேண்டும். பிறகு அதிதிகள், விருத்தர்கள், ரோகிகள் சிறுவர்கள் முதலியவர்களுக்கு ஆகாரமிட்டு பர்த்தாவுக்கு ஆகாரம் போடவேண்டும். ஷை ஆகாரங்களை சிரத்தையோடும் பக்ஷபாதமில்லாமலும் கோபவார்த்தைகளில்லாமலும் கொடுக்க வேண்டும்.

போஜன விதி

பிறகு சாப்பிடக்கூடிய இடத்தில் பர்த்தா முதலியவர்கள் உட்கார்ந்த பிறகு கோமய ஜலத்தினால் 4 மூலையாக ஸ்தலத்தை இடைவிடாமல் சுத்திசெய்து, தங்கம்வெள்ளி வெண்கலம் இவற்றினால் செய்யப்பட்ட பாத்திரத்திலாவது அல்லது பிலா, மா, நாவல், தென்னை பலாசம், வாழை, தாமரை பேய்அத்தி, உஹீகா, காஞ்சி முதலிய இலைகளிலாவது அன்னத்தை கரண்டியினால் பரிமாறவேண்டும்.

கூடாத பாத்திரம்

ஆல், அரசு, அத்தி, எருக்கை இலைகளிலும்; கல்லிலும், வஸ்திரத்திலும் கையிலும் மண் பாத்திரத்திலும், வாழை கர்ப்ப இலையிலும், இலையின் பின்புறத்திலும், தேவபாத்திரங்களிலும் இரும்பு பாத்திரங்களிலும் சாப்பிடக்கூடாது. தங்கம் வெள்ளி வெண்கலமானாலும், ஒருவர் சாப்பிட்ட பாத்திரத்தில் மற்றொருவர் சாப்பிடக்கூடாது.

பரிமாறும் விதி

முதலில் அன்னத்தையும் நெய்யையும் பரிமாறி, புருஷர்கள் பரிஷேசனம், ஆபோசனப் ப்ராணாஹுதிசெய்தபிறகுஉப்புஸம்பந்தமான பதார்த்தங்களைப் பரிமாறவேண்டும். ஸ்த்ரீகள் பரிஷேசனம், ஆபோசனம் ப்ராணாஹுதிகள் செய்யக்கூடாது.

அக்னியில் பக்குவம் பண்ணாத பழம், ஊறுகாய் முதலியவைகளையும், நெய் தைலத்தில் பக்குவம் பண்ணின வடை முதலியவைகளையும் கையினாலேயே பரிமாறவேண்டும். அக்னியில் பக்குவமான வஸ்துக்களையும் திரவமான

நெய், எண்ணெ ரஸம் முதலியவைகளையும் கரண்டியினாலேயேபரிமாறவேண்டும். இரும்பு கரண்டியினாலோ மண் பாத்திரத்தினாலோ ஒன்றையும் பறிமாறக்கூடாது. உப்பைச் சாப்பிடுகிறவர்கள் கண்ணுக்குத் தெரியும்படி பரிமாறக்கூடாது. சோற்றில் மறைத்தாவது மோர் முதலியதில் கரைத்தாவது சேர்க்க வேண்டும்.

பர்த்தா சாப்பிட்ட பிறகு உத்தராபோசனம் கொடுத்து கை கால்கள் சுத்திசெய்ய ஜலங்கொடுத்து ஆசமனம் செய்த பிறகு தாம் பூலமுங்கொடுத்து, பிறகு சுமங்கலியானவர்கள் கால் கைகளைச் சுத்தி செய்து இரண்டு தடவை ஆசமனம் செய்து கீழ்ச் சொன்ன நியமனங்களுடன் சாப்பிடவேண்டும்.

போஜன நியமம்

சாப்பிடும் பொழுது கோவிந்த என்று சொல்லிக்கொண்டு சாப்பிடவேண்டும். சாப்பிடவேண்டிய பதார்த்தங்களைக் கேட்பது தவிர, வேறு வம்பு வார்த்தைகள் சொல்லக்கூடாது. ரஸம் மோர் முதலியவைகளை தொன்னை இல்லாமல் கையில் வாங்கி சாப்பிடுவதும், காலை நீட்டிக்கொள்வதும் சாப்பிடுகிற கையை முழங்காலின்மேல் வைத்துக்கொள்வதும், இடது கையை கீழே ஊன்றிக்கொள்வதும், அழுவது, சிறிப்பது, சண்டை செய்வது நெடுங்காலமிருந்து சாப்பிடுவது, குழந்தைகளுக்கு இலைசோற்றை யெடுத்துக் கொடுப்பது முதலான நிஷித்தங்களைச் செய்யக்கூடாது.

இடதுகைப் பக்கத்தில் ஜலபாத்திரத்தை வைத்துக்கொள்ளக் கூடாது. இடது கையினால் ஒன்றையும் சாப்பிடக்கூடாது. போஜன காலத்தில் இடது கையிலிருக்கும் பாத்திரத்தினால் ஜலத்தை சாப்பிடலாம். ஒருதடவை சாப்பிட்டு மிகுந்த ஜலத்தை மறுபடி சாப்பிடக்கூடாது. கிடைக்காதபக்ஷத்தில் கொஞ்சம் ஜலத்தை பூமியில் கொட்டிவிட்டு பாக்கியை சாப்பிடலாம்.

ஸ்த்ரீகள் பர்த்தாவினுடைய யெச்சில் தவிர, மற்ற ஒருவடைய யெச்சிலையும் சாப்பிடக்கூடாது.

சாப்பிட்ட பிறகு கையை சுத்தமாக அலம்பி 16 தடவை வாயை கொப்பளித்து காலையும் நன்றாக அலம்பி ஆசமனம் செய்ய வேண்டும்.

பிறகு அவசியமான வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு வேதங்கள் ருஷிவாக்கியங்கள் தவிர மற்ற கிரந்தங்களினால் பகவத் குணங்களை அனுஸந்திக்கவும், பர்த்தா முதலான பெரியோர்களிடம் ஞானம், பக்தி, வைராக்யம் இவைகளை கொடுக்கக்கூடிய விஷயங்களை கேட்கவும், சக்தியிருந்தால் ஸாதுக்களான மற்ற ஸ்த்ரீகளுக்கு யேகாந்தமாக நல்ல விஷயங்களை உபதேசிக்கவும் செய்யலாம்.

நிஷித்தங்கள்

பகலில் தூங்குவது, பிறர் வீட்டில் வம்பு பேசுவது, பர்த்தாவையோ அல்லது மற்றவர்களையோ தூஷிப்பது மற்றும் பதிவ்ரதைக்கு பொருந்தாத கதைகளைப் படிப்பது, சூதாடுவது முதலான காரியங்களை செய்யக்கூடாது.

பரிஜன ரக்ஷணம்

தன் வீட்டுக்கு வந்த நாட்டுப்பெண்களை எந்த காரணத்தினாலாவது கஷ்டப்படுத்தினால் சூன்யம் வைத்த வீட்டிற்போல அவ் வீட்டிலும் பலவித துன்பங்களுண்டாகி குடும்பம் நாசமடைந்துவிடும்.

ஆகையினால் நாட்டுப்பெண்களையும் தன்னைப்போலவே ஆடையாபரணங்களினாலும் அன்னபானங்களினாலும் பக்ஷபாதமில்லாமல் உபசரித்து பிரியமாகவே வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகாரமிடுவதிலும், வேலைக்காரர்களுக்கும் மற்றை பந்துக்களுக்கும், தனக்கும் குழந்தைகளுக்கும், ஒருவருக்கு நல்லதாகவும், மற்றொருவருக்கு கெட்டதாகவும், பக்ஷபாதமாக ஆகாரம் கொடுப்பதும் மகாபாதகம்.

ஸாயங்கால காரியங்கள்

ஸாயங்காலத்தில் வீட்டை சுத்தி செய்து பகவானுடைய ஸன்னிதியையும் மெழுகி கோலமிட்டு, விளக்கேற்றி வைத்து, மகாலக்ஷ்மியையும் பகவானையும் தோத்திரங்களி

னால் கானத்தோடு ஸ்துதித்து, மாமியார், மாமனார், பர்த்தா மற்றும் பெரியோர்களை நமஸ்கரித்து காலையில்போல ஔபாஸநாக்னியைமூட்டி பூஜிக்கவேண்டும்.

ஆலயம் போவது

தன் பர்த்தா, தேவாலயத்திற்காவது உத்ஸவத்திற்காவது, பகவானை ஸேவிக்கப் போனால் தானும் கூடப்போய், தேவாலயத்தில் தும்புவது, தூங்குவது, வம்புபேசுவது, அபானவாயு விடுவது முதலான வபசாரங்களைச் செய்யாமல் கூட்டங்களில் போகாமல் ஸ்தோத்ரங்களைச் சொல்லிக்கொண்டு ஆலயத்துள் பிரவேசித்து, த்வஜஸ்தம்பத்தினடியில் கூர்மாதீன் யென்கிற ச்லோகத்தைச் சொல்லி நமஸ்கரித்து, ப்ராகாரத்தில் 4 மூலையிலும் ஸேவித்து பிறகு விஷ்வக்ஸேனர், த்வாரபாலர்களையும் நமஸ்கரித்து, பகவானையும் வலது புறத்தில் ஸேவித்து, பகவானுடைய திருமேனியை திருவடி முதல் திருமுடி வரையில் ஒவ்வொரு அங்கங்களும் நெஞ்சில் ஸ்திரமாக நிற்கும்படி அனுபவித்து, ஸ்தோத்திரங்களினால் ஸ்துதித்து கிருதார்த்தமான மனதுடன் தீர்த்தம், சடகோபன், துளசீ புஷ்பங்கள் முதலியவைகளை புருஷார்த்தங்களாகப்பெற்று பின்புறம் காட்டாமல் வெளியே வந்து ஸன்னிதியில் ஓரிடத்திலுட்கார்ந்து, முடிந்தவரையில் திருவஷ்டாக்ஷரத்தை ஜபித்து. நமஸ்கரித்து அடியேன் செய்த வபசாரங்களை எல்லாவற்றையும் க்ஷமித்தருளவேண்டு மென்று பிரார்த்தித்து, 2, 4 பிரதக்ஷிணங்களைப் பண்ணி விஷ்வக்ஸேநரை ஸேவித்து விடைபெற்று பர்த்தாவுடன் வீட்டிற்குவந்து பாகம் செய்து பர்த்தாவைக் கொண்டு பகவானுக்கு நிவேதனம் செய்வித்து, ஸந்தியா காலத்திற்குப் பிறகு பர்த்தா சாப்பிட்ட பிற்பாடு முன் சொன்ன நியமங்களுடன் ஸ்த்ரீகள் சாப்பிடவேண்டும்.

ஸாயங்கால வேளையில் வந்த அதிதிகளை யதாசக்தி அவசியம் உபசரிக்கவேண்டும். அவன் பட்டினியாக இருக்கக்கூடாது. மற்றும் பர்த்தா சொல்லுகிற ஸர்வ காரியங்களையும் ஆக்ஷேபிககாமல் அவசியம் பிரியமாகச் செய்வதோடு பர்த்தாவையே தனக்கு தேவதையாகவும், ஸர்வவித பந்துவாகவும் நினைத்து பக்தியோடு பூஜிக்கவேண்டும்.

சயநம்

பர்த்தா படுத்துத் தூங்கினபிறகு தானும் படுத்துறங்கவேண்டும். கோயில்களிலும், நாச்சந்தியிலும், பாழ்வீட்டிலும், சுடுகாட்டிலும், மற்றுமாசாரமில்லாத ஸ்தலங்களிலும், தேவதை, ஆசார்யன், பெரியோர்கள், பசு, தான்யம் இவைகள் கீழேயிருக்க உயர்ந்த ஸ்தானத்திலும் இவைகளை தன் கால்புறமாக வைத்தும் படுத்துத் தூங்கக்கூடாது. ஈரவஸ்திரத்துடனும், வஸ்திரமில்லாமலும், விருதமில்லாத காலத்தில் தர்பத்தின்மேலும், வடக்கே தலையை வைத்தும் படுத்துறங்கக்கூடாது.

ஸங்கமம்

பகவானுக்கு ஸமர்ப்பித்த சந்தனம், புஷ்பம், தாம்பூலங்களை பர்த்தாவுக்குக் கொடுத்து தானு மணிந்து, பர்த்தா சிரமத்துடனிருந்தால் கால் பிடிப்பது, விசிறியினால் வீசுவது முதலிய சிச்ருஷைகளைச் செய்து, ருதுகாலத்தில் நிஷித்தங்களல்லாத தினங்களில் இருவரும் வியாதி இல்லாத காலத்தில் ஸங்கமத்தை அடையவேண்டும்.

கூடாத காலம்

ஸ்த்ரீகளுக்கு ரஜஸ் உண்டான தினம் முதல் 16 தினங்கள் ருது காலங்கள் என்று சொல்லப்படும். அவற்றுள் முதல் 3 தினங்கள் வெளியில் வஸிக்கவேண்டும். 4-வது தினத்திலும் ஸங்கமம் செய்யக்கூடாது. பாக்கி 12 தினங்களிலும் ஷஷ்டி, அஷ்டமி, சதுர்தசி, அமாவாசை, பூர்ணிமை, மாதப்பிறப்பு, வ்யதீபாதம், பிறந்தநக்ஷத்ரம், தான் ச்ராத்தம்பண்ணின தினம், ஏகாதசி முதலான வ்ரததினங்கள், பகல், நடுநிசி. ஸந்த்யைகள் இந்த காலங்களில் ஸங்கமம் செய்யக்கூடாது. பர்த்தா பத்நிகள் நெடுங்காலம் பிரிந்திருந்துவந்ததினங்கள் கீழ்ச்சொல்லப்பட்ட தினங்களாக இருந்தால் ஸங்கமத்திற்கு நிஷேதமில்லை. ஓரிரவில் இரண்டுதடவை ஸங்கமம்செய்யக்கூடாது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்

(13-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

பருஷன்:— இன்னும் வரவில்லையே. அப் பேறு என்றுகொலோ.

விதூவயவடியஞுாரொஹாவரொஹ வஸிஹுஜெநி-ரயவஃவீயா தாயா தக்ஷுஜெஷ நிரஷஜெரஃ। க்ஷயிமதவஸிஸ்ராஷ்தீநாஜ்ஞா யஜொரதிவாஹு நஸூவயதி நிஜஹாயா ஷாயீ ஸ்வயம் ஹஸிவநஃ॥

கதிசிந்தநாதிகாரத்தின் முடிவிலும் இந்த ச்லோகம் வைக்கப்பட்டுள்ளது. இரண்டிடத்திலுமிது பொருந்துவதே. அங்கேபோலிங்கும் பரிபூர்ணப்ரஹ்மாநுபவ மடுத்தாற்போல் வாவிருக்கிறது. இங்கும் கதியை இவன் சிந்தநம் செய்துகொண்டு அதைப் பாரிப்பவன். ஸூத்ரகாரரும் கதிபாதமாகிய மோக்ஷாத்யாயம் மூன்றும் பாதத்திற்கு முன் இரண்டாம் பாதமுடிவில் ‹யொகிநஃ ப்ரதி ஸ்மயெதெ ஸாங்கெ வெதெ' என்கிற ஸூத்ரத்தால் பகவான் பக்தியோக ஷட்கத்தில் 8-வது அத்யாயத்தின் முடிவில் சாச்வதமென்று பாடிய இவ்விரண்டு கதிகளையும் பக்திநிஷ்டருக்கு நினைத்துக்கொண்டேயிருக்கவேண்டியதாக பகவானல் கீதாஸ்ம்ருதியால் பாடப்பட்டதாக விளக்கினர். ‹ஸாங்கெ ஸ்மயெதெ' விதூவயம்– தூமாதிமார்க்கம், ஏத்தச்சாலைப்போல் ஏறுவதுமிறங்குவதுமாயிருக்கும். கீழே(பூமிக்கு) வந்து கர்மங்களைச் செய்து புண்யமெனும் நிறைந்து மேலேபோய் அந்தப் புண்யச்சால் ஜலத்தைக் கொட்டிவிட்டு (சால் க்ஷீணமானதும்) கீழே பூமிக்கு மறுபடியும் வருகிறது. நிரயவஃவீயாதாயாதக்ஷுஜெஷு – நரகம் செல்லும் வழிகளிலும் சுற்றி இழுக்கப்படுவதும், நிரஷஜெரஃ– ஓய்வில்லாமல், இளைப்பாறுவதற்கிடமேயில்லாமல், ‹வயம்' ‹வஃவீ' ‹க்ஷயிமதவஸிஸ்ராஷ்தீநு' என்பதால் ‹ஸம்ஸாரவஃவீம் வ்ரஜநு' ‹ஜொஹஸ்ரம் வ்யாதொzவஸ' என்ற ச்லோகஸூசநர். இப்படித் திரிந்துவந்து களைத்த நம்மை, ஸூஜ்ஞாயஜொரதிவாஹு – ப்ரக்ருதிமண்டலத்தைத் தாண்டுவிப்பதற்கென்றே தாம் திட்டம் செய்திருக்கும் நித்யஸூரிதேவகணங்களால் தாண்டுவித்து, ஹஸிவநஃ– நம் தாபங்களையெல்லாமபஹரிக்கும் ஹரியெனும் சந்தனவ்ருக்ஷம், ஸ்வயம்– தாமே நேரில், (பிறரைக்கொண்டில்லாமல்) நிஜஹாயாஷாயீ– தன்னுடைய சீதளாநந்தஸ்வரூபச்சாயையையே (தம் நிரதிசயாநந்தத்தையே சாயைபோல இவனுக்கு ஸங்க்ரமிக்கச்செய்து) ஸூவயதி– ‹ஹஷஹெவாநநுயாதி' என்று ஆநந்தமய ப்ரஹ்மவிஷயத்தில் தித்திரிகள் பாடியபடி மகிழ்விக்கிறார். ‹ஸ்வயம்' ‹நிஜ' என்று ‹ஹஷஹெவ' என்கிற ச்ருதியும் ஸூசிக்கப்படுகிறது. ‹ஹாயா' என்பது நிழலையும், ப்ரதிபிம்பத்தையும் சொல்லும். அதிகாணஸாராவளியின் 544-வது ச்லோகசிந்தாமணிபதயோஜனைகளில் நட ஸபாபதி ஸப்யர்களுடைய ரஸஸாம்யந்யாயத்தையும் குறிப்பிட்டிருக்கின்றன. ‹ஜநாகு ஜெஹுஸவ' என்கிற ஸூத்ரமும் கவனிக்கத்தக்கது. பகவதுதாராநுக்ரஹத்தால் பேரின்பமுழுவதும் ஸமமாக முக்தருக்கும் ப்ரதிபலிக்கிறது. உயிரின் இன்பமப்படியே உடல்போன்ற முக்தருக்கும் முழுவதும் பரப்பி இன்பப்படுத்துகிறது. ‹வநநஃ' என்பது குளிர்ச்சியையும் பரிமளத்தையும் குறிக்கும். ‹தம் ஸ்ஹமஸஃ ப்ரவிசதி' என்று கௌஷீதகியையும் நினைக்கவேணும். ‘தம் ஸ்ஹரஸஃ ப்ரவிசதி' என்பதும் ப்ரஹ்மரஸமே இவனுக்கும் நிறம்புவதைக் காட்டுகிறது. ‹ரஸம் ஹெவாயம் லஸ்வா zzநநீஹவதி' என்பதும் நடஸபாபதிந்யாயத்

தையுமநுக்ரஹிக்கும். 'நிஜஹாயா' என்பதற்கு 'தன் ஸாம்யத்தை' என்று ப்ரபாவிலாஸ உரை. 'நிரயவஷவீ' எனும் நரகமார்க்கத்தைப் பற்றிய அச்வமேதபர்வ ச்லோகங்களுமுதாஹரிக்கப்பட்டன. 'விமுக்திவாஷவஹா யாமேதெ கூது ஸுவா ஹவெஸ' என்ற விஷ்ணுபுராணவசனமும், 'வாஸுஷெவதாஹாயா' என்ற ச்லோகமும் உதாஹரிக்கப்பட்டன.

ஸங்கல்பர்:—[ஸந்தோஷத்துடன்] ஸ்வாமி திருவுள்ளத்திற்கேற்றபடி இவனுடைய பக்தி இருக்கிறதென்று நிச்சயமாகத்தெரிகிறது.

ஙிய்ாஷ்ரஷிமுவெவிஙுவெகஊ முஷிதெ ஙஸ்ரஷயீ: கூஹவெஙா த்தீயஙு: வூதி வஙுஷொஷவிஷவிஹொஙஸ்ரஹாகூஷஙுமாக நிஙுாநஷிஙஷவஙுண வூதிஊஹிஷெஹயஸ ஸ்ரீஙஸாவஷ்ரவூத்ஙவஷகுஜிஹதி ஹவா கூஙிவாஙவாஙஷீழி ॥

ஙிய்ாஷ்ரஷிமுவெ: கூஹவெ: – ப்ராந்திகளால் வந்த கசடுகளெல்லாம், விவெகமுஷிதெ: – விவேகராஜரால் நீக்கப்பட்டதால், கூஸ்ரஷயீ:– அணுகாமல் அவற்றின் ஸ்பர்சமில்லாதவனாய், வூதிவஙுஷொஷ – தோஷம் நிரம்பியவை என்று நன்றாக அறியப்பட்ட, விஷவிஹொஙஸ்ரஹாகூஷஙுமாஷ த்தீயஙு சித்போசமென்பது கேவல ஆத்மாநந்தமெனும் சிற்றின்பம். சித்தின் இன்பமும் சிற்றின்பமேஎன்றரஸம். 'அளவிலாச்சிற்றின்ப'மெனும் பாசுரத்தில் ஸூசிதம். அதுவும் சேறே; அதிலே விழுந்துவிட்டால் அதிலிருந்துவெளிக்கிளம்பமுடியாது. அதிலாசை வைத்திரங்காமல் அதில் கால் வைக்காமலேயே தாண்டிவிடவேண்டும். அப்படியே அதினிடத்திலாசையிலும், ஆசையே சேறு. அநுபவிக்கத்தொடங்கினல் கேட்கவேணுமோ. ஆசை அழுந்தச்செய்யும் சேறு. 'நித்யாநம்' என்பது பக்திநிஷ்டை. அது ஆடாமலிருக்கும் நிலைக்கண்ணாடி. கண்ணடி ஆடினல் பிம்பத்தின் ப்ரதிபிம்பமும் ஆடும்; தெளிவேயிராது. இந்த நித்யாநத்தில் நிலைக்கண்ணாடியில்போல் ஹார்த்தனை ஆநந்தமயனுடைய நிரதிசயாநந்தவிசிஷ்டஸ்வரூபம்ப்ரதிபிம்பித்து, ஸம்ச்லேஷித்து மோக்ஷ இன்பம்போன்ற ஸுகத்தையும் ரஸத்தையும் பரப்புகிறது. ஆநந்தமயனுடைய ஆநந்தமயச்சாயை 'யதா தீபொ நிவாதஸ்தொ நெஜ்தெ ஸொபமா ஸ்ம்ருதா। யொகிநொ யதசித்தஸ்ய யுஜ்ஜதொ யொகமாத்மந:' என்று கீதையில் விஷயவிஷக்காற்றுகளால் ஆடாத தீபத்தை மனமொடுங்கிய யோகியின் ஜ்ஞாநப்ரபையான ஆடாதஸ்வரூபத்திற்கு உபமானமாகக் கூறியுள்ளது. இங்கு ஸ்திரமான, அசங்காத நிர்மலநிலைக்கண்ணாடி உபமானம். இந்த நிலைக்கண்ணாடியில் ப்ரதிபலிப்பது மோக்ஷஸ்ரீயான ப்ரஹ்மாநந்தமான எல்லையற்ற ஸுகம். ஆநந்தமயமாகிய ப்ரஹ்மமெனும் ரஸம் இவனுக்கு ஸங்க்ரமித்து வ்யாபித்து இவனந்த ஆநந்தத்தால் பூரித்து மகிழ்கிறான். இங்கே 'ப்ரதிபலநம்' என்றிருப்பதும் 'நிஜஹாயா' என்று முன் ச்லோகத்தின் பொருளை விளக்குவது. இப்பொழுது இவனுக்கு ஸம்ஸாரஸமுத்ரத்தைக்கடந்து நித்யமாய் நிரவதிகமாய் ப்ரஹ்மாநந்தத்தை ஸஹஜமாயநுபவிக்கும் மோக்ஷபோகத்தில் சேருமாசை மிகுந்திருக்கிறது. யோகஸமாதியில் பெறும் ப்ரஹ்மாநந்தம், முக்தியில் பெறும் ப்ரஹ்மாநந்தத்தில் ஸமுத்ரத்தில் ஓர் திவலைபோன்றதே என்று ஸாராவளியில் 522 ம் ச்லோகத்தில் ஸாதிக்கப்பட்டது. 'ஊஷ்ஷ்டு யஸ்ஷா ஸாயஊஹவதிவூஷதவஷஙி முகுதாநஙுஹ ஙிதெ:' என்று அந்த ச்லோகத்தில் ஸாதிக்கபபட்டது. 'ஸூமீ' என்பது அக்ருத்ரிமமான பூமி, நித்யமானபூமி. 'கூர-திமா தா ஹுமா' என்று அமர ஸுதை. ப்ராக்ருதமல்லாத ஜ்ஞாநாநந்தமயமான லோகம் நித்யவிபூதி.

(தொடரும்)

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(14-வது ஸம்புடம் 2-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

மற்றொரு கல்பனையும் செய்யவேண்டியிருக்கின்றது. சந்திரன் ஸூர்யனோடு இருந்தால் மறைந்துவிடுவான் கண்ணுக்குப்புலப் படவே மாட்டான். தனியே இருந்தால் ஸூர்யன் ஓரிடத்திலும் சந்திரன் ஓரிடத்திலுமிருப்பராதலின் சேர்ந்திருக்கும் இரண்டு திருக்கண்களுக்கு உபமானமாக முடியாது. தவிரவும் பூர்ணிமை தவிர மற்ற நாட்களில் சந்த்ரன் பூர்ணமாயிருப்பதில்லை. பூர்ணிமையில் கிழக்குக்கோடியிலும் மேற்குக் கோடியிலுமாக வெகு தூரத்திலும் ஒருவன் உதிப்பது மற்றவன் அஸ்தமிப்பது என்று வெவ்வேறு நிலையிலும் இருப்பார்கள். ஆகவே சந்த்ரனும் பூர்ணமண்டலனாயிருக்கவேண்டும். ஸூர்யன்போலவே சிவந்திருக்கவேண்டும். இருவரும் உதயமாகும் நிலை யிருக்கவேண்டும். அதிலும் ஒருவன் பக்கத்தில் ஒருவனைச் சேர்ந்து உதிப்பதாக இருக்கவேண்டும். என்றிக் கல்பனைகளையெல்லாம் கருத்தில் வைத்து திங்களு மாதித்தியனு மெழுந்தால் போல் என்றாள்.

இப்படிப் பூர்ணமாக விழித்து அழகாயிருக்கும் இரண்டு கண்களாலும் எங்களைப் பார்த்தாயாகில் எங்களிடத்திலுள்ள மிகக் கொடிய பாவங்களும் எங்களைவிட்டு விலகிப்போம். மற்ற பாவங்கள் எல்லாம் ப்ராயச்சித்தத்தினால் கழிந்துபோம். சாபம் மட்டும் அநுபவித்தே கழிக்கவேண்டியதொன்று. அவ்வளவு வலிதான பாவமும் என்ற பொருளில் சாபம் என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. உன்னோடிருந்து உன்னைச் சேவித்து நீ விரும்பும் குற்றேவல்களைச் செய்து உஜ்ஜீவிக்கும்படியான பெரும் பேற்றைப் பெறமுடியாதவகையில் எத்தனையோ ஜன்மங்களாக எங்கள்மேல் பெரும் பெரும் பாவங்கள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அத்தகைய எங்கள்மேல் அழகிய உன் இருகண்களுடைய முழுப்பார்வையும் விழுந்தால் பிறகு எவ்விதப் பாவமும் எங்களிடத்தில் தங்கியிருக்க முடியாது என்று விண்ணப்பம் செய்ய விரும்பினாள். 'நோக்கினால் பாவம்போம்' என்று சொன்னபோதிலும் 'மிகக் கொடிய பாவங்களையும் போக்கக் கூடியதன்றோ உன்னுடைய பார்வை. அப்படிப்பட்ட அதை எங்கள்மேல் செலுத்து' என்பதிலேயே கருத்து. கீழ்ச்சொன்னபடி இதை இவ்விதமாகவே ஸ்பஷ்டமாகச் சொல்ல மாட்டாமல் மாற்றிச்சொன்னாள்.

ஸ்ரீக்ருஷ்ணன் நித்ரை நீங்கி உணர்ச்சி பெற்றார். திருக்கண்கள் சிறிது சிறிதாக மலர்ந்து முற்றிலும் விழித்தன. பிரிய ஆரம்பித்ததுமுதல் பார்வை எல்லாம் நாயகப் பெண் விரும்பியபடி அப்பெண்கள்மேலேயே விழுந்தது. சரணாகதி பண்ணிப்பெற உத்தேசித்த பலனைப்பூர்ணமாகஅவர்கள்பெற்றார்கள்.

23. மாரி

நன்றாக விழித்து அப் பெண்களை எல்லாம் குளிரப்பார்த்துக்கொண்டே ஸ்ரீக்ருஷ்ணன் எழுந்து உட்கார்ந்தார். அயர்ந்து தூங்கினவர்கள் விழித்து எழுந்துஉட்காரும்போது அவர்களுடைய சரீரங்களில் பல பல செயல்கள் நிகழ்கின்றன. அவையெல்லாம் அப்போது எம்பெருமானுடைய திவ்ய திருமேனியில் உண்டாயின. அவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல்வெகு ரஸமாக அப்பெண்கள் ஸேவித்து மகிழ்ந்து அப்பேரானந்தத்தில் தங்களையே மறந்து நின்றார்கள். அவர்களுடைய அந்த நிலையைக் கண்டு எம்பெருமான் தானும் மிக மகிழ்ந்தான். 'பூர்வபாஷீ ச ராகவ:' என்ற தன் ஸ்வபாவத்திற்கேற்ப அவர்கள் தன்னிடம் பேசுவதற்குமுன் தானே அவர்களிடம் பேச வேண்டுமென்றுஎண்ணினான். என்னபேசுவது

என்று ஆலோசித்தான். தான் முற்றிலும் அவர்களுக்குப் பாரதந்த்ரன் என்றும் எது வேண்டுமோ அதையெல்லாம் அவர்கள் தயங்காமல் தன்னைக்கொண்டு செய்துகொள்ளலாமென்றும் சிறிதும் ஸந்தேகத்திற்கு இடமில்லாமல் ஸ்பஷ்டமாக அவர்களிடம் சொல்ல வேண்டுமென்று எண்ணினான். அதன்படியே "நான் இப்பொழுது என்னசெய்யவேண்டும். சொல்லுங்கள்" என்றான். எம்பெருமானுடைய திருவாக்கிலிருந்து வந்த இந்த இனிய சொற்களைக்கேட்டு அப்பெண்கள் எல்லாரும் களித்தனர். பிறகு நாயகப்பெண், ஸ்ரீகிருஷ்ணன் சயனித்திருந்தது, கண்விழித்தது, அதற்குமேல் செய்தது எல்லாவற்றையும் ஸேவிக்கும்படியான பாக்யத்தைத் தாங்கள் பெற்றதைப் பற்றித் தங்களுக்குள்ள மகிழ்ச்சியை அறிவித்துக்கொண்டு "கட்டிலை விட்டு இறங்கி வந்து ஸிம்மாஸனத்தில் எழுந்தருளியிருக்கவேண்டு"மென்று ப்ரார்த்திக்கின்றாள்.

தாங்கள் அங்கு அதுவரையில் ஸேவித்ததையெல்லாம் உபமானமுகமாகவே குறிப்பிட்டாள். மாரி மலை முழைஞ்சு, மழைகாலத்தில் மலையின் மேலுள்ள குஹை. நீருண்ட இருண்ட மேகங்கள் ஆகாசம் முழுவதும் பரவி கவிந்துகொண்டிருக்கின்றன. பகலில் ஸூர்யனையோ இரவில் சந்த்ரனையோ நக்ஷத்திரங்களையோ பார்க்கவே முடியாது. இடைவிடாது பொழிந்த மழையினாலும் அடித்த சாரக் காற்றினாலும் உலகமே ஜலமயமாகவும் குளிர்மயமாகவும் ஆகிவிட்டது. இந்த நிலையில் ப்ராணிகளுக்கு ஒருகுஹை கிடைத்தால் அது அவற்றுக்கு வெகு இன்பகரமாக இருக்கும். மழைஜலம் அதற்குள் எவ்விதத்திலும்வராது. தெற்கு முகமாகவும் சிறிய த்வாரமுள்ளதாகவும் முன் பக்கத்தில் பெரும் பாறைகளின் மறைவு உள்ளதாகவும் அது அமைந்திருந்தால் காற்றும் அதற்குள் நுழையமுடியாது. இப்படி மழை ஜலம், குளிர் காற்று இவற்றினுண்டான உபத்ரவம் சிறிது மில்லாத விடத்தில் வேண்டிய அளவு உஷ்ணமும் இருக்கும். அங்கு வஸிப்பது அப்போது வெகு ஸுகமாகவிருக்கும். இந்த நிலையில் இவ்விதக்குஹையில் ஒரு ஸிம்ஹம் போய்ப் படுத்தது என்று வைத்துக்கொண்டு பார்ப்போம். அது ம்ருகேந்த்ரன். பயம் என்பது சிறிதும் அதற்கு இல்லை. மற்ற எல்லா ப்ராணிகளும் அதனிடத்திலிருந்து பயப்பட வேண்டுமேயொழிய அதற்கு அச்சத்தை உண்டாக்கக்கூடிய மற்றொரு ஜந்து உலகத்தில் இல்லை. அரசர்களும் அவர்போன்றவர்களும் வேட்டையாட வந்தார்களாகில் அப்போது அவர்களிடமிருந்து அது பயப்படவேண்டியது அவச்யமே. ஆகிலும் மழைகாலத்தில் ஒருவரும் வேட்டையாடமாட்டார்கள். அதிலும் மலைமேல் ஏறி வேட்டையாடுவது ஸாதாரணமாய் நடக்கக்கூடிய விஷயமன்று. இப்படிக் குளிர்காற்று என்ற இவற்றால் சரீரத்திற்கோ தூங்கினால் எந்த ப்ராணியினால், அல்லது எந்த மனிதரால் என்ன ஆபத்து நேருமோ என்ற அச்சத்தினால் மனஸுக்கோ ஒரு உபத்ரவமுமிராமையினால் அங்கே சென்ற சிங்கம் மன்னிக்கிடந்து உறங்கும். தூங்கும் ஸமயம் வந்தவுடன் ஆஹாரத்திற்காக அலைந்ததினால் உண்டான களைப்பெல்லாம் தீரும்படி படுத்துத் தூங்கும். அப்போது கீழ் விளக்கியபடி தூக்கம் கெலிந்ததாய் இருப்பதற்கு எவ்விதக்காரணமும் இல்லாமையினால்அத்தூக்கம் மிகவும் ஆழ்ந்த தூக்கமாக இருக்கும். அறிவு என்பது சிறிதுமில்லாத 'ஸுஷுப்தி' எனப்படும் நிலை அது. உலகமோ தனது உடலோ ஒன்றுமே அப்போது தோன்றாது. இப்படி அது அறிவை முற்றிலும் இழந்த நிலையாகையால் சரீரமாவது அதன் எந்தப் பாகமாவது சிறிதும் அசையாது. எல்லாம் போட்டது போட்டபடியே இருக்கும். இவ்வாறு மன்னி அதாவது அசைவு என்பது சிறிதுமில்லாமல் படுத்துத் தூங்கும் அந்தச் சீறிய சிங்கம். தருண வயஸ்ஸு, அதற்குத் தக்க தேஹ அமைப்பு, அதற்கேற்ற வலிவு, எல்லாம் வாய்ந்து மிகக் கம்பீரமான தோற்

றத்தைப் பெற்றிருப்பதால் அது சிரிய சிங்கம். தூங்கும்போதும் அதன் அந்தஸ்ரீ அதை விட்டு அகலாது.

ஸ்வப்னம் காணுமல் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது மனிதர் புலி சிங்கம் பூச்சி புழு என்றிப்படி எவ்வித ஜீவனுயிருந்தாலும் எல்லா ஆத்மாவும் பரமாத்மாவினிடத்தில் போய்த் தங்குகின்றது என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. விழித்திருக்கும்போது செய்யும் வேலைகளினுல் களைத்துப்போன ஆத்மாக்களை அந்தர்யாமியாயிருக்கும் ஸர்வேச்வரன் தூக்கம் என்கிற நிலையில்தன்னிடத்தில் வைத்துக்கொண்டு களைப்பாற்றுகிருன். போதிய அளவு தூங்கினபிறகு அந்த ஆத்மாக்கள் அந்தர்யாமியான பரமாத்மாவினிடத்திலிருந்து மறுபடியும் விழிப்பு நிலைக்கு வருகின்ருர்கள். அதன் பிறகு முன்போலவே அந்தந்த சரீரத்திற்குத் தக்கபடி நடக்கிருர்கள். ஆகவே தூங்கும் நிலையை முதலாக வைத்து இரண்டாவதாக 'அறிவுபெருவது' என்கிற நிலையை நாயகப்பெண் குறிப்பிடுகின்ருள். அதுவரையில் அறிவு சிறிதுமில்லாமல் அசேதனம்போலவே கிடந்த ஆத்மாக்கள் அப்போது தம்மைப்பற்றிய உணர்ச்சியைப் பெறுகின்றன. களைப்பாருவதற்காக எம்பெருமானேடு சேர்ந்து நிற்பது என்பதால் ஸுஷுப்தி என்னும் நிலைகொண்டாடத் தகுந்தது. அசேதனம் என்கிற ஜடப்பொருள் எல்லாவற்றையும் காட்டிலும் சேதனம் எனப்படுகின்ற ஆத்மாவுக்குச் சிறப்பைத் தருவது அறிவே ஆகையால் **'भूतानामस्मि चेतना'** என்று கீதையில் ப்ரதானமாகக் கூறப்பட்ட அவ்வறிவைப் பெறும் நிலையும் ப்ரதானமானதே. அதனுல் இதை நாயகப்பெண் கூறினுள். **'लोकेन चैतन्यमिवोष्ण रश्मेः'** என்று ஜனங்கள் விடியற்காலத்தி லறிவு பெறுவதை மஹாகவி உபமானமாகக் கூறியிருக்கின்ருன். இனி மூன்ருவதாகக் கண் விழிப்பதைக் கூறினுள். இதை ஸாதாரணமாகக் 'கண் விழித்து' என்னுமல் 'தீ விழித்து' என்று அலங்காரப்பேச்சால் பேசினுள். சிங்கம் ராத்ரியில் ஸஞ்சரிக்கும் ப்ராணி. அப்போது அதன் கண்கள் ஜ்வலிக்கும். ஆகையால் அக்நிபோல் இருக்கும் அவற்றை அக்நி என்றே "அதிசயோக்தி" முறையில் கூறினுள்.

இம் மூன்று நிலைகளும் படுத்திருக்கும் போதே உள்ளவை. இனி எழுந்து நிற்கும் போது உண்டாகுமவற்றைப் பற்றிப் பேசுகின்ருள். இவற்றில் முதலாவது 'வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி' எனப்பட்டது. அயர்ந்து தூங்கும்போது வெகு நேரம் அசையாமல் எல்லா அவயவங்களும் ஒரே நிலையில் கிடந்துவிட்ட படியால் கொம்பு போல் ஆகி ஸஞ்சாரம் செய்யும்போது இருக்கவேண்டிய தன்மையை அவை இழந்து விடுகின்றன. ஆகையால் அவை மறுபடியும் அத்தன்மையைப் பெறும்படிச் சில கார்யங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது. அவ்விதக் கார்யங்களில் ஒன்று சரீரத்தை உதறுவது. தூங்கும்போது உடலின் ஒருபக்கத்தை முழுவதும் கீழேவைத்து நான்கு கால்களையும் நீட்டிக்கொண்டு படுத்திருக்கும் சிங்கம் அறிவுற்றுக் கண் விழித்தபிறகு தலையைத் தூக்கிக் கால்களை மடித்து ஸாதாரணமாக மாடுகள் படுத்திருக்கும் நிலையை அடைந்து அதன் பிறகு உடனே எழுந்து நின்று முன் கூறியதுபோல் தனது உடலை ஸ்வாதீனப் படுத்திக்கொள்வதற்காக உதறும். எப்படி உதறும்? எப்பாடும் பேர்ந்து உதறும். உடலில் ஒரு சிறுபாகமும் ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்தது என்பது இல்லை. ஒவ்வொரு பாகமும், ஊசிமுனை அவ்வளவு பாகமும் பெயர்ந்தது, அதாவது அசைந்தது. அப்படி ஒவ்வொரு பாகத்திலும் பெயர்ந்து உடலை உதறும் சிங்கம். இவ்வாறு உடலில் எல்லாவிடமும் பெயர்வதுதான் எப்படி? வேரி மயிர் பொங்கும் படி. வேரி - வாஸனை. வாஸனையுள்ள மயிர் எல்லாம் சிலிர்த்து நேராக நிற்கும். உடலில் படிந்திருக்கும்

போது மயிர்களுக்கு இயற்கையாயுள்ள வாஸனை பரவாது. சிங்கம் எழுந்து உடல் முழுவதும் அசையும்படி உதறும்போது சிலிர்த்து ஒவ்வொருமயிரும் தனித்தனியே நிற்க அவற்றின் வாஸனை உதறும் வேகத்தினால் எல்லாப் பக்கங்களிலும் பரவும். இவ்விதமாகச் சிங்கம் தன் உடலை உதறும்.

இவ்வாறு உதறியபிறகு அது உடல் முற்றிலும் ஸ்வாதீனப்படுவதற்காகவே சோம்பல் முரிக்கும். முன் கால்களையும் பின் கால்களையும் கொஞ்சம் அதிகமான தூரத்தில் வைத்துக்கொண்டு உடலைக் கொஞ்சம் பின்னுக்கு இழுத்தும் பிறகு முன்னுக்கு இழுக்கும். சோம்பல் முரித்த பிறகு நிமிர்ந்து கம்பீரமாய் நிற்கும். இதை நாயகப்பெண் 'மூரி நிமிர்ந்து' என்றாள். மூரி-சோம்பல் அதை முரித்து நிமிர்வது மூரி நிமிர்வது. இப்படி இந்த க்ரமத்தில் தனது சரீரத்தை வெளியில் ஸஞ்சரிப்பதற்கேற்றபடி ஸ்வாதீனமாகச் செய்து கொண்ட பிறகு படுத்திருந்த இடத்திலிருந்து புறப்பட்டு வெளியே வரும். ஆனால் புறப்படுவதற்கு முன் ஒரு முழக்கம் முழங்கும். அதாவது கம்பீரமாக கர்ஜிக்கும்.

இப்படி வெகு கம்பீரமான ஒரு சிங்கத்தினிடத்தில் காணக்கூடிய ஸம்பவங்களைப் போன்ற ஸம்பவங்களையெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் அப்பெண்கள் கண்டார்கள். ஸர்வஸௌகர்யங்களும் அமைந்த திவ்யமான சயன அறை. ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் ஸத்ய ஸங்கல்பனாய் விளங்கும் எம்பெருமானுக்கு பயப்படவேண்டிய காரணம் ஒன்றுமில்லையாதலால் கவலையற்ற ஆழ்ந்த நித்ரை. "ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்" என்று இவர்கள் ப்ரார்த்தித்தபடி அறிவு பெற்றது. பிறகு திருக்கண்களின் விழிப்பு. அதன் பிறகு படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்து திருக்கைகளை உதறியும், வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் திருமேனியைத் திருப்பியும் சோம்பல் முரித்தும் தன்னை ஸரிப்படுத்திக்கொண்டது. இதெல்லாமான பிறகு கம்பீரமாக எழுந்தருளியிருந்து பெண்களைப் பார்த்து காம்பீர்யமும் இனிமையும் நிரம்பப்பெற்ற குரலில் 'நான் என்ன செய்யவேண்டும்' என்று திருவாய் மலர்ந்தருளினது, இவை அத்தகைய ஸம்பவங்கள். இவற்றை நேராகச் சொல்லாமல்

மாரி மலை முழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கி

என்று உபமான மூலமாகவே குறிப்பிட்டுவிட்டு

புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாஉன்
கோயில்நின் றிங்கே போந்தருளி

என்று புறப்பட்டு வருவதை மட்டும் ஸ்பஷ்டமாகச் சொல்லி ப்ரார்த்தித்தாள். குஹையின் உள் ப்ரதேசத்திலிருந்து சிங்கம் எப்படிப் புறப்பட்டு வருமோ அப்படி, அவ்வளவு கம்பீரமாகவும் அழகாகவும், நீ பள்ளியறையிலிருந்து புறப்பட்டு இந்த ஆஸ்தானமண்டபத்திற்கு வரவேண்டுமென்றாள். ஸ்ரீ ராகவன் தனது மாளிகையிலிருந்து புறப்பட்டு கைகேயியுடன் தசரதர் இருக்கும் இடத்திற்குப் போகும்போது **'पर्वतादिव निष्क्रम्य सिंहो गिरिगुहाशयः'** என்றார் வால்மீகி பகவான். 'மலையின் குஹையில் படுத்திருந்த சிங்கம் அங்கிருந்து புறப்பட்டாப் போலே' என்பது அதன் பொருள். இந்த ஆதிகவியே **'गजसिंहगती वीरौ'** என்று ஸ்ரீராகவனுடைய நடை அழகிற்கு சிங்கத்தினுடையவும் யானையினுடையவும் நடையை உபமானக் காட்டியிருக்கின்றார். அப்படியே இவளும் பேசினாள்.

இவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை 'ஓ பூவைப் பூவண்ணா, என்று ஸம்போதனம் பண்ணினாள் (கூப்பிட்டாள்). அதன் கருத்து என்னவென்பதை ஆராயவேண்டும். பூவைப்பூ- காயாம்பூ. அதன் நிறம் கறுப்பு. அதுபோல் கறுத்த திருமேனியுடையவனே, என்பது முடிவாகக் கிடைக்கும் பொருள். சிங்கத்தை உபமானமாக்கி அதன் செயல்களைப் போன்ற செயல்கள் உடையவன் என்றாள் நாயகப்பெண். நான்கு காலும் வாலுமுள்ள விவேக மற்ற

(தொடரும்)

குடிலை:– வக்ரமாயுமிருக்கிற, குந்தலை:- கேசங்களோடு, ச்லிஷ்ட– ஸம்பந்தித்த, மூலே– அடிபாகத்தை உடையதாயும், ரத்நாபீட – ரத்நமயமான சிரோபூஷணத்தின், த்யுதி– காந்திகளால், சபளிதே – சித்ரவர்ணமாயுமிருக்கிற, ரங்கபர்த்து: கிரீடே– ஸ்ரீ ரங்கநாதனுடைய கிரீடத்தில், ஸ்திதிம்–நிலைத்திருப்பதை, அதிகதா:– அடைந்திருக்கிற, மே– என்னுடைய, சேதஸோ, வ்ருத்தய:-மனோவ்யாபாரங்கள், ராஜந்வத்ய:– நல்ல ராஜாவோடு கூடினவைகளாக ஆயிற்று.

(கரு) பகவானுடைய திருக்கேசங்கள் உயர்ந்த மாலைகள் சூடியிருப்பதனால், எப்போதும் நிலையாயிருக்கும் பரிமளத்தை உடையவைகளாயிருக்கின்றன. தேவிமார்களாலே நன்றாகப் பின்னி அலங்கரிக்கப்பட்டிருப்பதனால் அவர்களுடைய கரஸ்பர்சத்தினால் மிகவும் உத்கர்ஷத்தை அடைந்திருக்கின்றன. கோபகாலத்தில் உண்டான சோள தேசத்து ஸ்த்ரீகளின் சொற்கள் போல் வக்ரங்களாயு (சுருண்டவைகளாயு) மிருக்கின்றன. இப்படிப்பட்ட கேசங்களோடு கிரீடத்தின் அடிப்ரதேசம் ஸம்பந்தித்திருக்கிறது. அதாவது பின்னி முடிக்கப்பட்ட கேசங்களின் மேல், கிரீடம் சாத்தப்பட்டிருக்கிறது. நவரத்நங்கள் இழைக்கப்பட்ட சிரோபூஷணத்தின் (ராக்கடியின்) காந்திகள் சேர்ந்திருப்பதினால்அந்த கிரீடம் நாநா வர்ணங்களை அடைந்திருக்கிறது. இப்படிப்பட்ட கிரீடத்தில் என்னுடைய மனோ வ்ருத்திகள் ஈடுபட்டு ரஞ்சகனான ராஜாவை அடைந்தவைகளாக ஆகின்றன. (விஷயாந்தரங்களில் ஈடுபடாமல் எம்பெருமானிடமே ரமித்துக்கொண்டிருக்கின்றன என்றபடி.)

இப்படி கீழ் எட்டு ச்லோகங்களால் திருவடி முதல் திருமுடி வரை ஒவ்வொரு அவயவங்களையும் தனித்தனியாக அநுபவித்து மேல் ஒரு ச்லோகத்தால் எல்லா அவயவங்களையும் சேர்த்து அநுபவிக்கிறார். தன் புத்தியை நாயிகையாக்கி அந்தந்த அவயவங்களின் அநுபவத்தினாலுண்டான ஆநந்தத்தின் வைலக்ஷண்யத்தை வெவ்வேறு க்ரியா பதங்களால் நிர்தேசிக்கிறார்.

पादांभोजं स्पृशति भजते रङ्गनाथस्य जंघामूरुद्वंद्वे विलगति शनैरूर्ध्वमभ्येति नाभिम् ।
वक्षस्यास्ते वलति भुजयोर्मामिकेयं मनीषा वक्त्राभिख्यां पिबति वहते वासनां मौलिबन्धे ॥

[பாதாம்போஜம் ஸ்ப்ருசதி பஜதே ரங்கநாதஸ்ய ஜங்காம்
ஊருத்வந்த்வே விலகதி சநைரூர்த்வமப்யேதி நாபிம் ।
வக்ஷஸ்யாஸ்தே வலதி புஜயோர் மாமிகேயம் மநீஷா
வக்த்ராபிக்யாம் பிபதி வஹதே வாஸநாம் மௌளிபந்தே ॥] 10

(ப-ரை) மாமிகா– என்னுடையதான, இயம் மநீஷா– இந்த புத்தியானது, ரங்கநாதஸ்ய– ஸ்ரீரங்கநாதனுடைய, பாதாம் போஜம்– தாமரைப்புஷ்பம்போன்ற திருவடியை, ஸ்ப்ருசதி– தடவுகிறது, ஜங்காம்– கணைக்காலை, பஜதே– (பக்தியினால்) அடைகிறது. ஊருத்வந்த்வே– திருத்துடைகளிரண்டில், விலகதி– நன்றாய் லயிக்கிறது. சநை:– மெதுவாக, ஊர்த்த்வம்– மேல் இருக்கிற, நாபிம்– திருநாபியை, அப்யேதி– எதிர் நோக்கிச் செல்கிறது. வக்ஷஸி– திருமார்பில், ஆஸ்தே– (வெகுகாலம்) இருக்கிறது. புஜயோ:– புஜங்களில், வலதி–

சுற்றுகிறது. வக்த்ராபிக்யாம்— திருமுகமண்டலத்தின் சோபையை, பிபதி— பானம் செய்கிறது. மௌளிபங்க்தே— கேசபாசத்தில், வாஸநாம்— வாஸனையை, வஹதே— வஹிக்கிறது.

(கரு) என்புத்தியாகிற நாயிகை, முதன் முதலில், ஸ்ரீரங்கநாதனுடைய, தாமரைப் புஷ்பம் போல் சிவந்து ம்ருதுவான திருவடிகளை மெதுவாக ஸ்பர்சித்து ஸுகத்தை அடைகிறது. பிறகு இந்தநாயிகையின் மடியில் அவன் திருவடிகளைவைக்க, அவள், ஸம்வாஹநரூபமான (பிடிப்பது) ஸேவையைச்செய்கிறுள். அதற்குப் பிறகு திருத்துடைகளின் ஸௌந்தர்யத்தி லீடுபட்டு அதிலேயே லயித்துப் போகிறுள். மெதுவாக மேலிருக்கும் திருநாபியையும், அதின் ஸமீபத்திலிருக்கும் த்ரிவளியையும் அநுபவிக்கிறுள். அடுத்தபடியாக, பிராட்டிக்கு நித்யவாஸஸ்தலமாய் ஸ்ரீவத்ஸலாஞ்சிதமாய் ஹாரத்தோடு ப்ரகாசிக்கின்றதாயும், ஸந்தாபத்தைப் போக்கடிப்பதாயுமிருக்கிற, வக்ஷஸ்ஸ்தலத்தை அடைந்து அதின் போக்யதாதிசயத்தால் அங்கேயே சிரகாலம் ஸுகித்திருக்கிறுள். பிறகு புஜங்களை அடைந்தாள், பெருங்காற்றில் உதிர்ந்ததாய் சிறந்ததாயிருக்கிற நாநாஜாதி மாம்பழங்களை, கீழிருப்பவன் பரபரப்பினுல் இதை பொறுக்குவோம், அதை பொறுக்குவோம், என்று சுற்றி வருகிறுப்போல், புஜங்களை ஸாக்ஷாத்கரித்தவுடன், தோள்களை அநுபவிப்போமா, மணிக்கட்டையநுபவிப்போமா, கரதலத்தை அநுபவிப்போமா, அங்குளியை யநுபவிப்போமா, அங்குளீயகத்தை யநுபவிப்போமாவென்று பரபரப்புடன் சுற்றிச்சுற்றி வந்து அநுபவிக்கிறுள். பின்பு, திருமுக மண்டலத்தின் காந்தியிலீடுபட்டு அதராம்ருதபாநரஸத்தை அநுபவிக்கிறுள். பின், எம்பெருமானுடைய திருமுடியில் த்ருடமான ஸம்ஸ்காரவிசேஷத்தை அடைந்து, முடியில் சூடின அதிபரிமளதுளஸீ, மல்லிகா, மனோரஞ்சித, மந்தாராதி புஷ்பங்களின் பரிமளத்தை வஹிக்கிறுள்' என்கிறுர்.

இப்படி கீழ்ச்லோகங்களால் மூலபேர்திவ்ய மங்கள விக்ரஹத்தை அநுபவித்து மேல் ச்லோகத்தால் மூல பேரத்துடன் உத்ஸவ திவ்ய மங்கள விக்ரஹத்தையும் சேர்த்து அநுபவிக்கிறுர்:—

कान्तोदारैरयमिह भुजैः कङ्कणज्याकिणाङ्कैः लक्ष्मीधाम्नः प्रथुलपरिघैर्लक्षिताभीतिहेतिः ।
अग्रे किञ्चिद्भुजगशयनस्स्वात्मनैवात्मनस्सन् मध्येरङ्गं मम च हृदये वर्तते सावरोधः ॥

[காந்தோதாரைரயமிஹ புஜை: கங்கணஜ்யாகிணங்கை:
லக்ஷ்மீதாம்ந: ப்ரதுலபரிகைர்லக்ஷிதாபீதிஹேதி: ।
அக்ரே கிஞ்சித்புஜகசயநஸ்ஸ்வாத்மநைவாத்மநஸ்ஸந்
மத்யேரங்கம் மம ச ஹ்ருதயே வர்த்ததே ஸாவரோத: ॥] 11

(ப—ரை) அயம்— இந்த, புஜகசயந:— சேஷசாயியான ஸ்ரீ ரங்கநாதன், காந்த— மனோஜ்ஞமாயும், உதாரை:— நீண்டதாயும், தாநம் கொடுப்பதில் ஸமர்த்தமாயும், கங்கண ஜ்யா— வளைகளென்ன, நாணென்ன, இவைகளின், கிண— தழும்புகளை, அங்கை:— அடையாளமாய் உடையதாயும், லக்ஷ்மீதாம்ந: லக்ஷ்மியின் வாஸஸ்தானமான திருமார்புக்கு, (கோசக்ருஹத்திற்கு), ப்ருதுளபரிகை:— பெரிய உழல் தடிபோன்றதாயுமிருக்கிற, புஜை:—

புஜங்களால், லக்ஷித– காண்பிக்கப்பட்ட, அபீதி ஹேதி:- அபய முத்ரையென்ன, சங்க சக்ராத்யாயுதங்களென்ன இவைகளை உடையவராய், ஆத்மந:– தனக்கு (மூலவிக்ரத்திற்கு) (ஸிம்ஹாஸநத்தில்) கிஞ்சித்– கொஞ்சம், அக்ரே– முன்பாக, ஆத்மநைவஸந் – (உத்ஸவ) விக்ரஹத்துடன் எழுந்தருளியிருந்து கொண்டு, ஸாவரோத:– ஸ்ரீ பூதேவிகளுடன் கூடினவராய், மத்யே ரங்கம்– ஸ்ரீரங்கத்தின் மத்தியிலும், மமஹ்ருதயேச– என்னுடைய ஹ்ருதயத்திலும், வர்த்ததே– நித்யமாய் வாஸம் செய்கிறார்.

(கரு) திருவநந்தாழ்வானில் பள்ளி கொண்டிருக்கிற ஸ்ரீமந்நாராயணன், தானே தன்னுடைய முன் ப்ரதேசத்தில் தன் விக்ரஹ விசேஷமான உத்ஸவ திருமேனியுடன் ஸ்ரீ பூதேவிகளுடன் எழுந்தருளியிருக்கிறார். இவருடைய திருக்கைகள், அழகாயும், முழங்கால் வரை நீண்டதாயும், ஆச்ரிதாபேக்ஷிதங்களைக் கொடுப்பதில் மஹோதாரமாயும், வளைகள்நாண் இவைகளின் வடுக்களை உடையதாயும், (ஆச்ரித ரக்ஷணத்தில் பத்தகங்கணமாயும், விரோதி நிரஸம் செய்வதாயும்) நிதி வைக்கும் கிருஹத்திற்குக் காவலான பரிகம் (உழல் தடி) என்கிற ஆயுதம் போல், **'संपद् दिव्या'** என்கிறபடி பகவானுடைய ஸம்பத்தாகிற ஸ்ரீலக்ஷ்மியின் இருப்பிடமான திருமார்புக்கு பரிகாயுதம் போலுமிருக்கின்றன. அப்படிப்பட்ட நான்கு புஜங்களுள் ஒரு ஹஸ்தத்தில் அபய முத்ரையையும், மற்ற மூன்று ஹஸ்தங்களில் சங்கம், சக்கரம், கதை, இவைகளையும் வஹித்துக்கொண்டிருக்கிறார். இப்படி மூல விக்ரஹத்துடன் உத்ஸவ திவ்ய விக்ரஹத்துடனும் கூடின எம்பெருமான் ஸ்ரீரங்கமத்தியிலும், அதிநிஹீனனான என்னுடைய ஹ்ருதயத்திலும் ஸதாவாஸம் செய்கிறார். (தான் மாத்திரம் எழுந்தருளினால் ஒருக்கால், படுக்கையையும், பிராட்டிகளையும் நினைத்துக்கொண்டு அகலவும் கூடும் என்று எண்ணி, ஒரு நாளும் போகாமலிருக்கும்படி, புஜகசயந:, ஸாவரோத:, என்று படுக்கையையும், பிராட்டிமார்களையும் அழைத்துக்கொண்டு குடி வருவாரைப் போல், ஸ்ரீரங்க மத்தியில் போல என்னுடைய ஹ்ருதயத்திலும் பிரியாமல் குடி கொண்டிருக்கிறார்.

மேல் ச்லோகத்தில் இந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்திப்பவர்க்கு பல ச்ருதியையருளிச் செய்கிறார்:—

रङ्गास्थाने रसिकमहिते रञ्जिताशेषचित्ते विद्वत्सेवाविमलमनसा वेङ्कटेशेनक्लृप्तम् ।
अङ्केशेन प्रणिहितधियामारुरुक्षोरवस्थां भक्तिं गाढां दिशतु भगवद्ध्यानसोपानमेतत् ॥

[ரங்காஸ்தானே ரஸிகமஹிதே ரஞ்ஜிதாசேஷசித்தே
வித்வத்ஸேவாவிமலமநஸா வேங்கடேசேந க்லுப்தம் ।
அக்லேசேந ப்ரணிஹிததியாமாருருக்ஷோரவஸ்தாம்
பக்திம் காடாம் திசது பகவத்த்யானஸோபாநமேதத் ॥] 12

(ப–ரை) ரஸிகமஹிதே– ரஸிகர்களால் கொண்டாடப்பட்டதும், ரஞ்ஜித– ஸந்தோஷிக்கப்பட்ட, அசேஷ சித்தே– எல்லாருடைய மனதையும் உடையதுமான, ரங்காஸ்தாநே– ஸ்ரீரங்கம் என்கிற திவ்ய ஸ்தாநத்தில், (நர்த்தந ஸ்தாநத்தில்,) வித்வத்ஸேவா– வித்

வான்களான ஆசார்யர்களுடைய ஸேவையினல், விமலமநஸா— நிர்மலமான மனத்தை யுடைய, வேங்கடேசேந— வேங்கடநாதன் என்கிற என்னுல், க்லுப்தம்— செய்யப்பட்ட, ஏதத்— இந்த, பகவத்த்யாநஸோபாநம்— பகவத்த்யாநஸோபாநம் என்கிற ஸ்தோத்ரமானது ப்ரணிஹிததியாம்— மிகவும் அவதாநத்துடன் பகவானிடத்தில் வைக்கப்பட்ட புத்தியை யுடையவர்களான யோகிகளுடைய, அவஸ்தாம்— நிலையை, அக்லேசேந— க்லேசமில்லாமல், ஆருருக்ஷோ:— அடைய விருப்புகிறவ (அகிஞ்சன) னுக்கு, காடாம் பக்திம்— ஸ்திரமான பக்தியை, திசது— கொடுக்கட்டும்.

(கரு) 'ஸ்ரீரங்கம்' என்கிற திவ்யஸ்தாநம் ஒரு நர்த்தனஸ்தலப்போன்றது. நர்த்தநஸ்தலம் எப்படி ச்ருங்காராதி ரஸாபிஜ்ஞர்களால் கொண்டாடப்பட்டதாயிருக்குமோ, அப்படியே இந்த ஸ்ரீரங்கமும், நவமரஸமான சாந்திரஸப்ரதாநர்களாயும், பகவதநுபவரஸிகர்களாயுமிருக்கிற நம்மாழ்வார், திருமங்கை மன்னன். ஸ்ரீமன் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய மஹான்களால் அத்யந்தம் உத்யேச்யமாய் பரிக்ரஹிக்கப்பட்டதாய், எல்லாருடைய சித்தத்திற்கும் ஸந்தோஷத்தை உண்டு பண்ணுவதாயிருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்ரீரங்கஸ்தாநத்தில், வித்வத்ச்ரேஷ்டர்களான ஆசார்யர்களுடைய சுச்ரூஷையினல்நிர்மலமான மனத்தையுடைய என்னுல், கற்றுதேர்ச்சி பெற்றவர்களின் சிக்ஷை பெற்ற சில்பியினல் நிர்மாணம்செய்யப்பட்ட ஸோபாநம் (படிக்கட்டு) போல் க்ரமமாக பகவத் த்யானத்தை விளக்கிச்சொல்லுவதால், "பகவத்த்யாநஸோபாநம்" என்று பேர் பெற்ற, இந்த ஸ்தோத்ரம், பகவானிடம் ஏகாக்ரமான சித்தத்தை வைத்து த்யாநம் செய்து பரிபூர்ண யோகதசையை யுடையவர்களின் நிலையை கர்மயோகஜ்ஞாநயோகாதி க்லேசங்கள் சிறிதுமில்லாமல் அடைய விரும்புகிற அகிஞ்சனனுக்கு, ஸக்ருதநுஸந்தாந மாத்திரத்திலேயே, ஸாக்ஷாத்காராவஸ்தையை அடைந்த பக்தியை கொடுக்கட்டும்? என்கிருர்.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

[கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நமः ॥]

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

11-3-55 அன்று வடுவூரில் ஸ்ரீராகவ ஆய்யங்கார், ஸ்ரீநரஸிம்மஅய்யங்கார் தங்களுடையகிருஹத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அன்று ராத்ரி ஆராதகர் ஸ்ரீ வித்வான் ராமபத்ராசாரியர் ஸ்வாமியினுடைய ப்ரார்த்தனையின் பேரில் அவருடைய கிருஹத்திற்கு எழுந்தருளினர். 12-3-55 அன்று ஆராதகர் விசேஷமாக ஆராதித்தார். அன்று ராத்ரிஸ்ரீ விஜயராகவாச்சாரியர் ப்ரார்த்தனையின் பேரில் அவர் கிருஹத்திற்கு எழுந்தருளும்பொழுது அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின் பேரில் விசேஷ நாதஸ்வர வாத்தியத்துடனும் வாண வேடிக்கைகளுடனும் ஸ்ரீமாலோலன் தங்கப் பல்லக்கிலும் ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப் பல்லக்கிலும் எழுந்தருளி எல்லா வீதிகளிலும் ஸேவை ஸாதித்தார்கள். அவ்வூர் வாஸிகள் மிகவும் ஸந்தோஷமடைந்தார்கள். 13-3-55 அன்று விஜயராகவாசாரியர் தன்னுடைய கிருஹத்தில் எழுந்தருளப்பண்ணி பெரிய பெருமாளுக்கு ஸ்வாதி திருமஞ்சனம் பண்ணி வைத்து விசேஷமாக ஆராதித்தார். அன்று ராத்ரி 9 மைலில் உள்ள ஒரத்த நாட்டிற்கு எழுந்தருளினர். 14—3—55 அன்று கோபாலாசாரியர், ஸ்ரீ ஸ்ரீனிவாஸாசாரியர்முதலியவர்கள் விசேஷமாக ஆராதித்தார்கள். அன்று மாலை ஆச்ரமத்தில் 4 மணிக்கு அவ்வூர் வாசிகள் ஆண் பெண் அனைவரும் மிகவும் பக்திச்ரத்தையுடன் பழம் தேங்காய் வெற்றிலை பாக்கு முதலிய உபஹாரங்களுடன் வந்து ஸ்ரீ அழகிய சிங்கரை ஸேவித்து மந்த்ராக்ஷதை பெற்றுப் போனார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரும் அவர்களுடைய பக்தியைக் கண்டு தாமாகவே நம் தேசாசாரத்தில் ஊக்கம் அதிகம் வேண்டும், மதப்பற்று வேண்டும், ராஜ்யம் இப்போது நம் அதீனமாகையால் கூச்சமற்று நம் கடமையைச் செய்யலாம் என்றும், சிகை அவசியம் என்பதையும் எடுத்து ஸாதித்தாயிற்று. ஜனங்களும் அப்படியே அநுஷ்டிப்பதாக விஜ்ஞாபித்தார்கள். அன்று ராத்ரி மறுபடியும் வடுவூர் வாசிகளின் ப்ரார்த்தனையின்பேரில் 9 மணிக்கு புறப்பட்டு வடுவூர் தெற்குத் தெருவுக்கு எழுந்தருளினர். அத்தெருவாஸிகள் அனைவரும் 15-3-55 விசேஷமாக ஆராதித்தார்கள். இத்தெரு கன்யாபெண்கள் குழந்தைகள் எல்லாரும் சேர்ந்து ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணி வைத்தார்கள். இவ்வூருக்கே மன்னார்குடி வாஸிகள் வந்து மன்னார்குடிக்கு எழுந்தருளவேண்டுமென்றும் ஸ்ரீராஜகோபாலனையும் மங்களாசாஸனம் செய்யவேண்டும் என்றும் திருவுள்ளத்திற்கு ஏற்ப தகுந்த ஏற்பாடுகளை செய்கிறோம், நிச்சங்கமாக எழுந்தருளலாம் என்றும் ப்ரார்த்தித்தார்கள். அன்று ராத்ரி 9 மணிக்கு புறப்பட்டு 9 மைல் உள்ள மன்னார்குடிக்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் ஊர் எல்லை ஆரம்பத்திலேயே பூர்ண கும்பத்துடன் வரவேற்று விசேஷ பாராயண கோஷ்டியுடன் சில முக்ய வீதிகளின் வழியாக அவ்வூர் ஸ்ரீஅஹோபில மடத்தில் எழுந்தருளப்பண்ணினர்கள். 16-3-55 அன்று புக்தகரம் ஸ்ரீ ரங்கஸ்வாமி அய்யங்கார் ததீயாராதனம் பண்ணிவைத்தார். அன்று கோயில் டிரஸ்டிகள் தீக்ஷிதர்கள் ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் முதலிய மற்றும் ஊரில் உள்ளவர்கள் நிச்சங்கமாக மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளவேண்டும். அதற்கு வேண்டிய கார்யங்கள் ஆரம்பித்து திருவுள்ளத்திற்கு உகப்பாக நடந்துகொண்டு இருக்கிறது' என்று மறுபடியும் ப்ரார்த்தித்தார்கள். 17-3-55 ல் அபிகமன ஆராதனத்திற்கு பிறகு ஸ்ரீமடத்திற்கு அரவணை பிரஸாதத்துடன் கோயிலதிகாரிகள் வந்து பிரார்த்தித்தார்கள். பிறகு

ஸகல பிருதுகளுடன் ஸ்ரீராஜகோபாலனை மங்களாசாஸனம் பண்ண எழுந்தருளியாயிற்று. த்வஜஸ்தம்பத்தின் அருகில் எழுந்தருளும்பொழுது ஸ்ரீசடாரியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து வழக்கமான ஸகல மர்யாதைகளுடன் எதிர்கொண்டு செங்கமலத் தாயார் ஸன்னதியிலும் ஸ்ரீராஜகோபாலன் ஸன்னதியிலும் கிரமமாக ஸகல மரியாதைகளும் பண்ணி மங்களாசாஸனமும் பண்ணி வைத்தார்கள். 'ஸ்ரீ அழகிய சிங்கர் பிரஹ்ம உத்ஸவ ஸமயத்தில் எழுந்தருளினதும் ஸ்ரீ மடத்தின் வாசலிலேயே பெருமாள் எழுந்தருளி ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸேவை ஸாதிக்கும்படி நேர்ந்ததும் எல்லாம் வெகு ஆச்சர்யமாக சேர்ந்திருக்கிறது. எங்களுடைய பாக்ய விசேஷம்' என்றார் அங்குள்ளவர்கள் விஜ்ஞாபித்தார்கள். அப்படியே தேசிகன் ஸன்னதி முதலியவைகளில் மங்களாசாஸனம் செய்துகொண்டு வழக்கப்படி ஸகல மர்யாதைகளையும் பெற்றுக்கொண்டு ஸ்ரீ அஹோபில மடத்திற்கு எழுந்தருளினர். அன்று மாலை காலக்ஷேபம் முடிந்ததும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸகல பிருதுகளுடன் மன்னார்குடி ஸ்ரீ அழகியசிங்கர் பிருந்தாவனத்திற்கு எழுந்தருளி மங்களாசாஸனம்செய்தருளியாயிற்று. அன்று அவ்வூர் வாஸிகள் ததீயாராதனை பண்ணி வைத்தார்கள். 18-3-55 அன்று தெற்குதெரு ஸ்ரீகோபாலய்யர் ததீயாராதனை பண்ணி வைத்தார். காலை அபிகமன ஆராதனம் முடிந்ததும் வாசலில் ஸ்ரீராஜகோபாலன் பல்லக்கில் எழுந்தருளும்பொழுது கோயில் அதிகாரிகளின் பிரார்த்தனையின்பேரில் ஸ்ரீ அழகிய சிங்கர் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. வழக்கம்போல் ஸகல மர்யாதைகளும் நடந்தன. அன்று அநேகம் பேர்களுக்கு ஸமாச்ரயணமும் சரணாகதியும் நடந்தன. ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் ஸ்ரீ தேசிகாசாரியர் பண்ணிவைத்தார். 19-3-55 அன்று எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்தார். காலை அபிகமன ஆராதனம் முடிந்ததும் நேற்று மாதிரி வாசலில் பல்லக்கில் ஸ்ரீ ராஜகோபாலன் எழுந்தருளும் சமயமும் சரியாயிருந்தபடியால் ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸனம் செய்தருளியாற்று. வழக்கப்படி ஸகல மர்யாதைகளும் நடந்தன. அன்று ஸ்ரீ ஈச்வர அய்யர் ததீயாராதனை பண்ணி வைத்தார். 20-3-55 ஏகாதசியன்று ஊர் வாஸிகள் ஆராதித்தார்கள். ஸாயங்காலம் 3 மணிக்கு ஹரித்ரா நதி வீதிவழியாக பெருமாளுடைய புண்யகோடி கிராமம் வரையில் அவர்களுடைய ப்ரார்த்தனைக்காக எழுந்தருளிவிட்டு திரும்பும்போது மன்னார்குடி ஸ்ரீ அழகிய சிங்கர் பூர்வாச்ரம திருமாளிகைக்கும் அந்த அழகிய சிங்கர் பௌத்ரன் ஸ்ரீ கண்ணனய்யங்கார் ப்ரார்த்தனையின் பேரில் எழுந்தருளியாயிற்று. அன்று ராத்ரி அவ்வூர் பிரபல மிராசுதாரரான ஸ்ரீ A. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் தன்னுடைய கிருஹத்திற்கு எழுந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். ஊர் வாஸிகள் வீதி உத்ஸவமாக எழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தபடியால் ஸ்ரீ மாலோலன் தங்கப்பல்லக்கிலும் ஸ்ரீ அழகிய சிங்கர் தந்தப் பல்லக்கிலும் எழுந்தருளியிருந்து ஸுமார் ராத்ரி 10 மணிக்கு ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து ஆரம்பித்து விசேஷ வாத்யகோஷத்துடனும் அநேக லைட்டுகளுடனும் வாண வேடிக்கைகளுடனும் பாராயண கோஷ்டியுடனும் கோபால ஸமுத்திரம் நாலு வீதிகளிலும் எழுந்தருளி ஸேவை ஸாதித்துக்கொண்டு அக்ரஹாரத்தில் உள்ள ஸ்ரீ A. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் கிருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. வீதி உத்ஸவத்தை அவ்வூர் வாஸிகள் ஸேவித்து ஸந்தோஷமடைந்தார்கள். சில ஊர்களில் முதலில் பெருமாளை எழுந்தருளப்பண்ணுவதே ஸந்தேகமாக இருந்தது. எழுந்தருளப்பண்ண பிறகு பக்தி மிகுதியாலும் ஸந்தோஷ மிகுதியாலும் ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் என்று பெருமாளை விடுவதற்கே மனதில்லாமல் மேல் மேல் ஆராதித்தார்கள். அந்த கணக்கில் ஸ்ரீ A. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் தன்னுடைய கிருஹத்தில் எழுந்தருளப்பண்ணி அவ்வூர் பிர



பலர்களின் உத்ஸாகத்தின்பேரில்மூன்று நாள் விசேஷமாக ஆராதித்தார். 21-3-55 அன்று ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணி வைத்தார். 22-3-55 அன்று எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்தார். ஸாயங்காலம் 4 மணிக்கு அவர்களின் ப்ரார்த்தனையின்பேரில் கீதையில் கண்ணனுடையவும் அர்ஜுனனுடையவும் உக்திப்ரத்யுக்திகளைக் கொண்டு எல்லா ஜனங்களுக்கும் புரியும்படி ‚நம் ஆசாரத்திலிருந்து எக்காரணத்தை உத்தேசித்தும் நழுவக்கூடாது. அதிலும் சிகையை விடக்கூடாது’ என்று எடுத்து ஸாதித்தாயிற்று. 23-3-55 அன்று ராத்ரி 9 மணிக்கு புறப்பட்டு 12 மைல் உள்ள கோம்பூருக்கு எழுந்தருளும்பொழுது மன்னார்குடி வாஸிகளின் ப்ரார்த்தனையின்பேரிலும் ஸகல பிருதுகளுடன் பெருமாளுடன் பல்லக்கில் கோபிநாதன் ஸன்னதிக்கு எழுந்தருளி புதிதாக அவ்வூர் ஸ்ரீ கோபால அய்யங்காரால் பண்ணி வைக்கப்பட்ட சேஷ வாஹனத்தில் ஸ்ரீராஜ கோபாலனை மங்களாஸாசனம் செய்தருளியாயிற்று. வழக்கப்படி ஸகல மர்யாதைகளும் நடந்தன. அவ்வூர் வாஸிகள் ஸ்ரீ அழகிய சிங்கர் இவ்வூருக்கு எழுந்தருளும்பொழுது இவ்விடத்திற்குத்தான் அரவணை ப்ரஸாதம் கொண்டுவந்து ஸ்ரீ அழகிய சிங்கரை மங்களாஸாசனத்திற்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகிற வழக்கம். அப்பொழுது நடக்காத குறையை ஸ்ரீராஜகோபாலன் இவ்வூரைவிட்டு ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளும்பொழுது தாமே இவ்விடத்திற்கு எழுந்தருளி ஸேவை ஸாதித்தான். ‚இது ஒரு பெரிய ஆச்சர்யம்’ என்று ஸந்தோஷமடைந்தார்கள். அப்படியே கோபிநாதனையும் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. பிறகு கோம்பூருக்கு எழுந்தருளினர்.

24-3-55 அன்று கோம்பூரில் ஸ்ரீ வெங்கிடகிருஷ்ணமாச்சார் முதலிய அக்ரஹார வாஸிகள் பூர்ண கும்பங்களுடன் எதிர்கொண்டழைத்து விசேஷமாக ஆராதித்தார்கள். அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின்பேரில் 25-3-55 அன்றும் அவ்வூரிலேயே எழுந்தருளி

யிருந்தாயிற்று. அன்று ராத்ரி ஸ்ரீகண்ணனுக்கு டோலை உத்ஸவம் பண்ணிவைத்தார்கள். ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு சேனங்குளத்திற்கு எழுதருளியாயிற்று. 26-3-55 அன்று சேனங்குளத்தில் ஸ்ரீ ராமானுஜாசாரியர் மிகவும் நன்றாக ஆராதித்தார். டோலை உத்ஸவமும் நடந்தது. அன்று ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு குறிச்சி அக்ரஹாரத்துக்கு எழுந்தருளியாயிற்று. 27-3-55 அன்று குறிச்சியில் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ அய்யங்காரும் அவர் தம்பியும் சேர்ந்து ஆராதித்தார்கள். அன்று ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 28-3-55 அன்று பெருகவாழ்ந்தானுக்கு எழுந்தருளியாயிற்று. பெருகவாழ்ந்தானில் அக்ரஹாரம் ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஜாகையில் எழுந்தருளியிருந்தார். கிராமக் குடிகள் பெருமாள் ஸம்பாவனையும் மறுநாள் (29-3-55) திருமஞ்சனமும் செய்துவைத்தார்கள். பெருமாள் எழுந்தருளின அன்று அக்ரஹாரம் ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ததீயாராதனம் பண்ணிவைத்தார். காலையிலும் ஸாயங்காலமும் ஸ்ரீ T. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் (உள்ளூர்) தளிகை ஸமர்ப்பிவித்து ஆராதித்தார். அன்று காலையில் ஸ்ரீராமன் ஸன்னதிக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளி கோயில் வேலைநடந்திருப்பதையும்கடாக்ஷித்துவிட்டு பெருமாளையும் மங்களா சாஸனம் பண்ணியாயிற்று. தெற்கேயுள்ள ஸ்ரீகோதண்டராமன் ஸன்னதிக்கும் எழுந்தருளி ஜீர்ணோத்தாரணம் செய்ய வேண்டியவைகளையும் கடாக்ஷித்தாயிற்று. பெருமாளையும் மங்களா சாஸனம் செய்தாயிற்று. அன்று மத்யானம் புறப்பட்டு மறவாதி, ச்ரோத்ரியம் பெருகவாழ்ந்தான் முதலிய பெருமாள் கிராமங்களுக்கு எழுந்தருளி, கடாக்ஷித்துவிட்டு அவ்விடத்தில் செய்யவேண்டியவைகளையும் கவனித்துவிட்டு எழுந்தருளியாயிற்று. 30-3-55 அன்று உள்ளூர் அக்ரஹார வாஸிகள் சேர்ந்து ஆராதித்தார்கள். 31-3-55 வரை பெருகவாழ்ந்தானில் எழுந்தருளியாயிற்று. பெருகவாழ்ந்தானுக்கு பட்டுக்கோட்டை வாஸிகள் வந்து, அவசியம் ஸ்ரீராமநவமிக்கே ச்ரமத்தைப்பாராமல் எழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்ததின்பேரில் 31-3-55 ராத்ரி புறப்பட்டு பட்டுக்கோட்டைக்கு எழுந்தருளியாயிற்று. 1-4-55 அன்று பட்டுக்கோட்டையில் வாத்யார் ஸ்ரீ நரஸிம்ஹாசார், ஸ்ரீநிவாஸாசார் மற்றும் வக்கீல்கள். உள்ளூர் ப்ரமுகர்கள் விசேஷமாக திருமஞ்சனம் பண்ணி ஆராதித்தார்கள். ஸ்ரீமத் ராமாயணம் ஸேவிக்கப்பட்டது. அதற்கு அர்த்தம் ஸாதிக்கும் பொழுது ஸ்ரீமத் ராமாயணத்தில் முக்யமாக ராஜ்யவிஷயங்களும் குடும்பவிஷயங்களும் பூர்வாசாரங்களையும் வைதிகதர்மங்களையும் விடக் கூடாது என்ற விஷயங்களும் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஸாதித்தாயிற்று. அன்று ராத்ரி அவ்வூர் ஸ்த்ரீகளெல்லாரும்சேர்ந்து டோலோத்ஸவம்பண்ணிவைத்தார்கள். அன்று ராத்ரியே பெருகவாழ்ந்தானுக்கு மறுபடிஎழுந்தருளியாயிற்று. 2-4-55 அன்று திருத்துறைப்பூண்டியிலிருந்து ஸ்ரீ நாராயண அய்யங்கார் முதலிய ப்ரமுகர்கள் பெருகவாழ்ந்தானுக்கு வந்து ஆவச்யம் எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். அன்று ராத்ரி புறப்பட்டு திருத்துறைப்பூண்டிக்கு எழுந்தருளும்போது மார்க்கத்தில் குமட்டித்திடல் அக்ரஹாரவாஸிகள் உபஹாரமும் ஹாரத்தியும் ஸமர்ப்பித்தார்கள். திருத்துறைப்பூண்டியில் 3ம் தேதியும் 4ம் தேதியும் (ஏகாதசி த்வாதசி 2 நாளும்) நன்றாக ஆராதித்தார்கள். திருத்துறைப்பூண்டிக்குப் பெருமாள் எழுந்தருளுகிறது நிச்சயமான பிறகு விளக்குடியார் ஊருக்கு எழுந்தருளும்படி ரொம்பவும் ப்ரார்த்தித்தவுடன் விளக்குடிக்கு எழுந்தருளிவிட்டு பிராந்தியங்களைக் கெழுந்தருளுவதாக ஸாதித்தாயிற்று. 4-4-55 ஸாயங்காலம் ப்ரதோஷாராதனம் ஆனபிறகு திருத்துறைப்பூண்டியிலிருந்து ஆதிரங்கம் எழுந்தருளியாயிற்று. அது, 31-பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சட கோப ஸ்ரீநாராயணவேதாந்த யதீந்த்ர மஹா தேசிகன் அவதாரஸ்தலம். அந்த அழகியசிங்கர் ப்ருந்தாவனம் ஆடுதுறை ஸமீபம் தியாகராஜபுரத்தில் உள்ளது. 25 வருஷத்திற்கு முன்கூட அவ்விடம் 20, 30 ஸ்ரீவைஷ்ணவர்

கள் இருந்தார்களென்று சொல்லுகிருர்கள். இந்த விசேஷங்களையும் திருவுள்ளத்தில் கொண்டு ஆதிரங்கம் எழுந்தருளியாயிற்று. ஆதிரங்கத்தில் பெருமாளை மங்களாஸாஸநம் செய்துகொண்டு அங்கிருந்து விளக்குடிக்கெழுந்தருளியாயிற்று. விளக்குடியில் வக்கீல் ஸ்ரீ கோபாலசாமி அய்யங்கார் முதலியவர்களுடைய உதவியின்பேரில் அவ்வூராரும், புத்தங்கோட்டகம் தேசிகாசாரியர் குமாரர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியரும் 5, 6 இரண்டு தேதிகளும் விசேஷ உத்ஸாஹத்தோடு ஆராதித்தார்கள். பிராந்தியங்கரையார் ப்ரார்த்தித்ததின்பேரில் அன்று ராத்ரி பிராந்தியங்கரைக்கு எழுந்தருளியாயிற்று. (தொடரும்)

குறிப்பு:— ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமத்தில் பெருமாளை ஆராதித்தவர்களது பெயர்களோ, மற்றவைகளோ விட்டுப்போயிருந்தால் அவைகளைத் தெரிவித்தால் அடுத்த ஸஞ்சிகையில் திருத்தம் போடப்படும்.

9-4-55ல் தினத்தந்தி பத்ரிகையில் ஸ்ரீ அழகியசிங்கர் விஷயமாக ப்ரசுரிக்கப்பட்டவை முற்றிலும் பொய்யான விஷயம். ஸ்ரீ அழகியசிங்கர்பேரிலோ, பல்லக்கின்பேரிலோ கல் வீச்சு நடக்கவில்லை. இது விஷயம் ஸ்தலபோலீஸ் அதிகாரிகளை விசாரித்தால் தெரியும். ஸஞ்சார ஆரம்பத்திலிருந்தே கெவர்மண்டால் கொடுக்கப்பட்டு வரும் பந்தோபஸ்தைத் தவிர வேறு போலீஸ் பந்தோபஸ்து விரும்பப்படவில்லை. நமது ராஜ்யத்தில் பலவிதககூதிகள் இருக்கும்பொழுதும் ஸ்ரீ அழகியசிங்கரின் விஜயம் மிகுந்த உத்ஸாஹத்துடன் எல்லோராலும் ஆதரிக்கப்படுவதை ஸஹியாத அந்த பத்ரிகையினுடையவோ, பத்ரிகையின் நிரூபருடையவோ துஷ்ப்ரசாரத்திற்காக ப்ரசுரிக்கப்பட்ட பொய்யான செய்தி அது என நாம் அறிகிறோம்.

திருத்தங்கள்:—

சென்ற ஸஞ்சிகையில் 80-வது பக்கத்தில் 18-2-55 என்றவிடத்தில் 18, 19 இரண்டு தேதிகளிலும் ஸ்ரீ எ. ஆர். வெங்கடாசாரியர் ஆராதித்தார் என்றும், அதே பக்கத்தில் 2-வது பத்தியில் 23-வது வரியில் 'எழுந்தருளுவதைப்பற்றி' என்பதற்கு மேல் 'நிச்சயத்தை மறுநாள் சொல்லுவதாக ஸாதிக்கும்படியிருந்தது' என்றும், 81-வது பக்கத்தில் 1-வது பத்தியில் 32-வது வரியில் (இருகரை) ஸ்ரீ என். ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்காரென்பதை கே. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்காரென்றும், 82-வது பக்கத்தில் 2-வது பத்தியில் 10-3-55 (கம்பயநத்தம்) 'ஸ்ரீரங்கநாத ஐயங்கார் ஸ்ரீநாராயண ஐயங்கார் முதலியவர்கள் பெரியபெருமாளுக்குத் திருமஞ்சனம் பண்ணிவைத்து அராதித்தார்கள்' என்பதை 'ஸ்ரீரங்கநாத ஐயங்கரும், க்ராமத்தார்களும் 10-3 55ல் ஆராதித்தார்கள். ஸ்ரீரங்கநாத ஐயங்கார் பெரியபெருமாளுக்குத் திருமஞ்சனம் பண்ணிவைத்தார்' என்றும் திருத்தி வாசிக்கவும்.

[ஸம்பாதகர்]

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீஸபா

11—8—54 ஸ்ரீ ப. நாராயணசார்யர் ஸ்வாமி (ந்யாயாத்யாபகர்) தலைமையில் கார்யதர்சி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

22—8—54-ல் ஸ்ரீ உப. ப. நாராயணசார்யர் ஸ்வாமி (ந்யாயாத்யாபகர்) தலைமையில் V. ராமானுஜன் (V. S. II) 'ஆஸாஹிபரமம்ஸூகம்' என்பதைப் பற்றியும்.

28—8—54-ல் ஸ்ரீ S. D. ஸ்ரீநிவாஸசார்யர் ஸ்வாமி (திருவையாறு ஸம்ஸ்க்ருத

கலாசாலை ப்ரின்ஸிபால்) 'வித்யார்த்தினும் கர்த்தவ்யம்' என்பதைப் பற்றியும்,

5—9—54-ல் ஸ்ரீ M. S. நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி (வ்யாகரணாத்யாபகர்) தலைமையில் J. சேஷாத்ரி (N. S. II) 'விகாரஹேதௌ ஸதி விக்ரியந்தே' என்பதைப்பற்றியும்;

3—10—54-ல்ஸ்ரீ T. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (ப்ரின்ஸிபால்) 'ஆசார்யகுண மஹிமா' என்பதைப்பற்றியும்,

27—10—54-ல் ஸ்ரீ P. N. ராகவாசாரியர் ஸ்வாமி (வ்யாகரணாத்யாபகர்) தலைமையில் N. V. நிகமாந்தம் (V.S. II) 'துஷ்கரம்கிம் மஹாத்மனும்' என்பதைப்பற்றியும்,

11—11—54-ல்ஸ்ரீ S. கோபாலாசாரியர் ஸ்வாமி (மீமாம்ஸாத்யாபகர்) தலைமையில் T. R. S. ராகவன் (V. S. III) 'ஏகா க்ரியா த்வ்யர்த்தகரீ பபூவ' என்பதைப் பற்றியும்,

15—11—54-ல் ஸ்ரீ வ. த. ஸம்பத்குமாராசார்யர் ஸ்வாமியால் (ந்யாயாத்யாபகர்) 'சாத்ரஸந்தேசினீ' என்னும் பத்ரிகை ஆரம்பிக்கப்பட்டது.

17—11—54-ல் ஸ்ரீ ப. ந. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி (தமிழ் உபாத்தியாயர்) தலைமையில் V. D. ரங்கராஜன் (N. S. II) 'பக்தி:' என்பதைப் பற்றியும்,

24—11—54-ல்ஸ்ரீ வி. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி (தமிழ்உபாத்தியாயர்) தலைமையில் J. சேஷாத்ரி (N. S. III) 'விநயம்' என்பதைப் பற்றியும்,

29—11—54-ல் ஸ்ரீ P. N. ராகவாசாரியர் ஸ்வாமி (வ்யாகரணாத்யாபகர்) 43-வது பட்டம் ஸ்ரீஅழகிய சிங்கர் ப்ரபாவத்தைப் பற்றியும்,

9—12—54-ல் ஸ்ரீ M. S. நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி (வ்யாகரணாத்யாபகர்) ஸ்ரீகோஷ்டீபுரம் ஸ்வாமியின் வைபவத்தைப்பற்றியும்,

17—12—54-ல் ஸ்ரீ ப. நாராயணாசாரியர் ஸ்வாமி (ந்யாயாத்யாபகர்) தலைமையில் P. S. வரதன் (A. D. III) 'தர்மம்' என்பதைப் பற்றியும்,

22—12—54-ல் ஸ்ரீ S. கோபாலாசார்யர் ஸ்வாமி (மீமாம்ஸாத்யாபகர்) 40-வது பட்டம் ஸ்ரீஅழகிய சிங்கர் மஹிமையைப் பற்றியும்,

31—12—54-ல்ஸ்ரீ V.D ஸம்பத்குமாராசார்யர் ஸ்வாமி (ந்யாயாத்யாபகர்) 41வது பட்டம் ஸ்ரீஅழகிய சிங்கர் குணதிசயங்களைப் பற்றியும்,

7—2—55-ல் ஸ்ரீ P. N. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி (தமிழ் உபாத்தியாயர்) தலைமையில் V.ராமானுஜன் [V.S. II] 'க்ருதக்நோஸ்தி நிஷ்க்ருதி:' என்பதைப் பற்றியும் உபன்யாஸம் செய்தார்கள்.

கோ. ந. வரதராஜன்,
காரியதர்சி.

தி. ராமஸ்வாமி ஐயங்கார்,
அத்யக்ஷகர்.

தூப்புலில் பெரிய திருப்பாவாடை மஹோத்ஸவம்

எம்பெருமானிடத்து அன்பும் ஆதரவும் மிகுந்தோர் நூற்றுக் கணக்கில் தளிகைகள் ஸமர்ப்பித்து இன்புறுவது தொன்று தொட்டு காணப்படுகிறது. ஸ்ரீ ஆண்டாள் நூறுதடா வெண்ணெயும், அக்காரவடிசலும் திருமாலிருஞ்சோலைநம்பிக்குச்சொன்னாள் என்பதும், ஸ்ரீபாஷ்யகாரர் ஸமர்ப்பித்தார் என்பதும் ஸுப்ரஸித்தம். இவைகளை உத்தேசித்து வைசாக ப்ரஹ்மோத்ஸவத்தில் தீர்த்தவாரி தினத்தன்று ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் தமது ஆராத்ய தேவதையான அத்திகிரி அருளாளப் பெருமாளுக்கு நூற்றுக்கணக்கில் பக்ஷ்ய போஜ்யங்களை கண்டருளப்பண்ண இச்சிறியோனை நியமித்திருக்கிறார். ஆகையால் இப்பெரிய கைங்கர்யத்தை நல்ல முறையில் பூர்த்தி செய்ய தங்களாலியன்ற பொருளுதவி செய்து பெருமாளுடையவும், ஆசார்யருடையவும் இன்னருளுக்கிலக்காக வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராம தாசரதி தாஸன்,
ஸ்ரீ தூப்புல் வேதாந்த தேசிகன் கைங்கர்யம்.

ஸ்ரீ:

ஓரொன்று தானே (5)

ஸர்வரக்ஷணே ஶக்த: யேந யேந ஹேதுநா ।
ஸ ஸர்வஸ்வாஹமேவேதி சரமஶ்லோகஸங்க்ரஹ: ॥

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் சரமச்லோகாதிகாரத்தில் காணப்படும் ஒரு காரிகை இது. அருமையான அர்த்தவிசேஷங்களை அங்கங்கே தமது ஸ்ரீஸூக்திகளில் வெளியிடும்போது அவைகளைச் சுருக்கி ஒரு ச்லோகரூபமாகவோ பாசுரரூபமாகவோ அருளிச்செய்வது, ஸ்வாமி தேசிகன், பின்புள்ளாருக்குச் செய்த மஹோபகாரங்களுள் ஒன்று. அச்லோகத்தையோ, பாசுரத்தையோ ஸுலபமாக மனப்பாடஞ்செய்து அவ்வர்த்தங்களை மறவாது தரிக்க நமக்கு அவை இன்றியமையாதவை. ஶாரீரகஶாஸ்த்ரத்தின் துரூஹமான அர்த்தங்களையுங்கூட அதிகரணஸாராவளியில் அழகிய ச்லோகங்களில் அமைத்துப் போந்த அவ்வாசார்யச்ரேஷ்டருக்கு இது ஒரு பெரிய கார்யமில்லையென்றாலும் நம்போன்றவர்களுக்கு அதனாலேற்படும் அனுகூலங்கள் சொல்லிலடங்கா.

கீதைக்குப் பொருள் கூறாதவர்களே கிடையாது என்று சொல்லலாம்படி அளவிறந்த டீகைகளும், வ்யாக்யானங்களும், ஸங்க்ரஹங்களும் ஏற்பட்டிருக்கின்றன. எனினும் ஆளவந்தாரது கீதார்த்தஸங்க்ரஹமும், பகவத்ராமானுஜனது கீதாபாஷ்யமும், ஸ்வாமி தேசிகனது தாத்பர்யசந்த்ரிகையும் நம்மவருக்கு விசேஷித்து உபகரித்தருளுவன. சரமச்லோகத்திற்குப் பொருள் பலபேர்கள் பலவிடங்களில் பலபடியாகக் கூறியிருப்பினும், அந்த ச்லோகத்திற்கு நம்மாசிரியர்பெருமான் தாத்பர்ய சந்த்ரிகையிலும் சரமச்லோகாதிகாரத்திலும் எடுத்துரைத்திருக்கும் அர்த்தவிசேஷங்கள் வெகு விலக்ஷணங்கள் என்று கூறவேண்டுவதில்லை. இந்தவிஷயத்தில் ஆளவந்தாரையும், நம்இராமாநுஜனையுங்கூட அதிசயித்துவிட்டார் தேசிகோத்தமன் என்றால் அது மிகையாகாது. ஏன்! வைசம்பாயன, சௌனகப்ரப்ருதிகளெல்லாம் சிரக்கம்பனம் செய்யும்படியன்றோ இவ்வர்த்தங்களமைந்திருக்கின்றன! அவைகளை மதிப்பிட்டுப் பேச இனி யாருக்கு வல்லமையுண்டு?

ப்ரபத்தியை ஸாக்ஷாத் மோக்ஷோபாயமாக ஸித்தாந்தித்துப்போந்த பெருமை வேதாந்த தேசிகனுக்கே உரியது என்பது உலகமறிந்த விஷயம். 'ப்ரபத்தி ஜநகம் ஜநநம்யயி:' 'தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன்' என்ற பிருதங்களெல்லாம் அதற்குச் சான்று. ப்ரபத்தி புதிதாக ஒரு உபாயமாக தேசிகனால் ஏற்படுத்தப்பட்டதன்று. ந்யாஸவித்யை உபநிஷத் வித்யைகளுளொன்று என்பதுமட்டுமன்றி 'முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே' என்றுபேசி உபதேசிக்கப்பட்ட மற்ற ப்ரஹ்ம வித்யைகள் போலன்றிக்கே தானே அநுஷ்டித்ததொரு வித்யை யிது என்று உபநிஷத் ஆதாரம் தோன்றப் பாராட்டிய உபாய விசேஷந்தான். எனினும் இது பக்தியோகத்துக்கு அங்கமாகவே கருதப்பட்டு வந்தது. அதை அங்கியாக்கி ஸாக்ஷாத் மோக்ஷோபாயமாக ஸ்தாபித்தருளிய தேசிகனது ஸாமர்த்யம் தாத்பர்ய சந்த்ரிகையிலும், அதிலும் அழகாக சரமச்லோகாதிகாரத்திலும்பார்க்கப்படுகிறது அவ்வதிகாரத்தில் சில பாகங்களை ஸேவிக்கும்போது இது கடினமான ஶாஸ்திரமா, நயம் மிகுந்த காவ்யமா என்று ஐயமேற்படும்படி அவ்வளவு லளிதமாகவும் ரஸமாகவும் பங்க்திகளமைந்தமைப்புலப்படும். அவ்வதிகாரத்தில் விஸ்தாரமாக அருளிச் செய்யப்பட்ட விஷயங்களெல்லாம் இந்த அநுஷ்டுப் ச்லோகத்தின் மூன்று பாதங்களில் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கின்றன.

'எந்த எந்த அபிமத ஸாதனம் பின்பற்ற மிக அரிதாக ஒருவனுக்கு [அபிலஷிப்பவனுக்குத் தோன்றுவதால் துன்பமுறுகிறானோ] அந்த அந்த ஸாதனம் அவனுக்கு நானே ஆவன்'', என்பதுதான் சரமச்லோக ஸங்க்ர

ஹம்". இது இந்த ச்லோகத்தின் பொருள்.

ஒரு அபிமதம், அதன் ஸாதனம், அந்த ஸாதனத்தின் அருமை, அதனுல் ஏற்படும் சோகம். அந்த சோகத்துக்குப் பரிஹாரம் நான் என்று இறைவன் அறுதியிடுதல். இவையனைத்தும் சுருக்கமாகத் திரட்டப்பட்டு இந்த ச்லோகத்தில் காண்கின்றது. "மூல ச்லோகத்திலுள்ள தர்மம்" என்பது "அபிமத ஸாதனம்" என்று பொருள் படும், என்று ரஹஸ்யங்களில் அருளிச் செய்யப்பட்ட அர்த்த விசேஷம் "இஷ்டஹேது" என்ற சொல்லானது இங்கேகுறிக்கப்பட்டிருக்கிறது. "மாம் ஏகம்" என்ற சொற்கள் "அஹமேவ" என்ற தோற்றத்தில் விளங்குவன. 'ஶோசஃ' என்ற சொல் 'ஶோசஸி' என்பதில் காட்டப்படுகிறது. "உபாயந்தரஸ்தானத்தில் நான் நிற்கிறேன்" என்பதுதான் முக்கிய தாத்பர்யம் சரமச்லோகத்திற்கு என்பது நன்கு உணர்த்தப்பட்டிருக்கிறது.

மோக்ஷோபாயம்மட்டுமல்ல ஸர்வேச்வரன் எந்தப் பலனை வேண்டி நின்றாலும் அதற்கு ஏற்பட்ட உபாயத்தை அனுஷ்டிக்க இயலாத போது அப் பலனையடைய எம்பெருமானையே உபாயமாகப் பற்றினுல் போதும் என்று காட்டப்பட்டிருக்கிறது. 'ஶ்ரூயதாம் ஹவ' என்று தொடங்கும் முன் ச்லோகத்தோடு சேர்த்துப் பொருள்கொண்டபோது மோக்ஷத்திற்கான உபாயம் என்றும் தனிப்பட அனுஸந்திக்கும் போது ப்ரபத்தி யென்பது ஸர்வபல ஸாதனம் என்றும் விளக்கப்பட்டிருக்கிறது. அதிகாரமும் ஏற்பட்டு, அங்கங்களும் நன்கு பொருந்தினுல், ப்ரபத்தியால் ஸாதிக்க முடியாத தொன்றுமில்லை என்று உறுதி கூறப்படுகிறது. ந்யாஸதசகம், ந்யாஸதிலகம், ந்யாஸ விம்சதி, சரணுகதி தீபிகை, நிக்ஷேபரக்ஷை இவைகளெல்லாம் இந்தச் சிறு ச்லோகத்தின் விவரணங்களே.

இதுவரையில்சொன்ன பெருமைகளெல்லாம் ஒருபுறமிருக்க வேறு ஒரு ரஸவத்தான அம்சத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது இச் ச்லோகம். மஹாகவி காளிதாஸனது ஶாகுந்தல நாடகத்தைப் பயின்ற பேர்களுக்கு இந்தச் ச்லோகத்தை ஸேவிக்கும் போது அம் மஹாகவியின் பின் வரும் ச்லோகம் நினைவிற்கு வாராமல் போகாது. ஆருவது அங்கத்தில் பின்வரும் ச்லோகம் காணப்படுகிறது.

'யேந யேந வியுஜ்யந்தே
ப்ரஜாஃ ஸ்நிக்தேந பந்துநா।
ஸ ஸஃ பாபாத்ருதே தாஸாம்
து[illegible] இதி கோஷ்யதாம்॥'

தனமித்ரன் என்ற வியாபாரி, கப்பல் கவிழ்ந்து பிராணனை யிழந்ததாகவும் அவனுக்கு அதுவரை குழந்தைகளில்லை யெனவும் கேட்டு, துஷ்யந்தன் மேற்கண்டபடி ஒரு அறிக்கையை விளம்பரம செய்யச் சொன்னதாக அங்கே விஷயம்.

ஸ்வாமி தேசிகன் ச்லோக அமைப்பைக் கவனித்தால் இந்த காளிதாஸ ச்லோகத்தைத் திருவுள்ளத்தில் கொண்டு அதைப் பலபடி பரிஷ்கரித்து, ஒரு ஸாமாந்ய அரசனது அர்த்தமற்ற விடம்பனத்தை "ராஜாதிராஜஃ ஸர்வேஷாம்" என்று சொல்லக் கூடிய ஸர்வ ஶரண்யனுடைய அனுக்ரஹ அருளிச் செயலாக மாற்றிப் பாடியபடியைக் கண்டு இன்புறலாம். ஸர்வவித பந்து ஸர்வேச்வரனன்றி வேறு யார் ஆகமாட்டுவர்! ஒரு அரசன் பந்துக்களை இழந்தவர்களுக்கு நான் அதேமாதிரி பந்து ஆவேன் என்று சொல்லும்போதே 'பாபாத்ருதே' என்று ஒருநிபந்தனை போட்டாக வேண்டிவருகிறதே! "சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் மேலாத் தாய் தந்தையுமவரே யினியாவரே" 'யென்றும் 'பிதா த்வம் மாதா த்வம் தயித தநயஸ்த்வம்......' என்றுமெல்லாம் பாப ஸம்பந்தமில்லாத, நிருபாதிகபந்துவான, எம்பெருமானை யன்றி வேறு யாரைக் கொள்ள முடியும்! இந்த அறிவு நமக்கு ஏற்படுகிறது இரண்டு ச்லோகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது. காவியரசனைக்குப் பெயர்பெற்றும் கையாண்ட விஷயங்களெல்லாம் தாழ்ந்தவையாகவும் குறைவானவையாகவும் போனதால் காளிதாஸன் கவிதை படிப்பவருடைய நீடித்த க்ஷேமத்திற்கும் ஆத்மலாபத்துக்கும் ஆகாது போனதற்கு வருந்தி, ஸ்வாமி தேசிகன் அம் மஹாகவி வாக்யங்களைக்கொண்டே பரமபுருஷ விஷயமான பல வர்ணனைகளைச்செய்து காவிய இன்பத்தையும், ஆத்மலாபத்தையும், பாமாத்மாவின் அநுபவத்தையும் ஒருங்கே செய்துகாட்டு மழகுக்கு இது ஒரு சிறிய சான்று. இம்மாதிரி பலபலவிடங்களில் காணலாம். அவற்றுள் ஒரொன்றுமே அமையாதோ?

199556